Registered as a newes paper in Ceylon

பிலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 3 ஆம் நாள் துல்கஃதா 21 (16-4-63) செவ்வாய்க்கிழமை இதழ் 66

ஈழநாடு

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

# புதிய மேயருக்கும் தலையிடி ஆரம்பம்!

## தமிழ் இயக்கம் நீடிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தமிழரசுக்கட்சி ஆரம்பித்த 'எல்லாம் தமிழ் இயக்க வாரம்' மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. தமிழியக்க வாரம் காலவரையின்றி நீடிக்கப்படுமா என்பது நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தின் பின்னரே இறுதியாக முடிவு செய்யப்படும்.**

வவனியாவில் சமீபத்தில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் தமிழ் இயக்க வாரம் அனுஷ்டிப்பதென்று தீர்மானித்து அதற்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டபோதிலும் தமிழ் இயக்க வாரம் தொடர்ந்து நடத்தப்படுமென்று தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

தமிழ் இயக்க வாரம் நேற்றுடன் முடிவடைய வேண்டும். ஆனால் இன்றும் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

தமிழியக்கம் தொடர்ந்து நடைபெறுமென்றும் 'எல்லாம் தமிழ் இயக்க வாரம்' பற்றி நாளை நடைபெறும் கூட்டத்தின் பின் இறுதி முடிவு செய்யப்படுமென்றும் வட்டுக்கோட்டை எம். பி திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழியக்கம் ஒவ்வொரு தொகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. தமிழரசுக்கட்சித் தொண்டர்கள் தபால் நிலையங்களின் முன் நின்று மக்களிடம் அவரது கருமங்களைத் தமிழிலேயே செய்யும் படி கோரி வருகின்றனர். நாளை புதன்கிழமை வரை தமிழியக்கம் தற்போது நடைபெற்று வருவது போல தீவிரமாக நடைபெற்றுவரும். 17-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கட்சிப் பொதுக் கூட்டத்தில் தமிழியக்கம் எவ்வகையில் தொடர்ந்து நடைபெறும் என்ற முடிவு வெளியிடப்படுமெனத் தெரிகிறது.

கட்சி மேற்கொள்ள விருக்கும் நேரடி இயக்கத்திற்கு தமிழியக்கம் முன்னோடியானது என்று கூறப்படுவதனாலும் தமிழியக்கம் தொடர்ந்து நடைபெறுமென்று தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கூறியிருப்பதனாலும் தமிழரசுக் கட்சியின் நேரடி இயக்கம் ஆரம்பிக்கப்படும் வரை தமிழியக்கம் தொடர்ந்து நடைபெறலாமெனத் தெரிகிறது. ஆயினும் தமிழியக்கம் தற்போது நடைபெறுவதனைப்போல தீவிரமாக நடத்தப்படாவிடினும் மக்களைத்தமிழிலேயே அவர்களது கருமங்களைச் செய்யும் படி அடிக்கடி கோரப்படுவர்.

தமிழியக்கம் வியாழக்கிழமையிலிருந்து எம்முறையில் நடைபெறும் என்பது இன்று அல்லது நாளை வெளியாகிவிடும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் தமிழியக்க வாரப் பிரசாரக் கூட்டங்கள் இன்று கிளிநொச்சியில் நடைபெறும் கூட்டத்துடன் முடிவடைகின்றன.

### கிழக்குமாகாணத்தில்

திருக்கோணமலை பெரிய தபாற் கந்தோர், நகரின் மத்தியிலுள்ள உபதபாற் கந்தோர் உப்புவெளி உபதபாற்கந்தோர் ஆகியவற்றின் முன்னிலையில் எல்லாம் தமிழ் இயக்கம் ஐந்தாவது நாளாக இன்று தொடர்ந்து நடைபெறுகின்றது. ஏழாம் வட்டார நகராண்மைக்கழக உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் திருக்கோணமலைக் கிளைத் தலைவருமான திரு. இ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இன்றைய இயக்கத்தில் பல தொண்டர்கள் கலந்துகொண்டனர். தபாற்கந்தோருக்கு வந்த சிங்களவர் ஒருவர்தான் வெளியூர் ஒன்றிற்கு அனுப்புவதற்குகொண்டு வந்த தந்தியை தமிழில் எழுதும்படி வலிந்து கேட்டசம்பவம் இன்று நடைபெற்றது. "சிங்களவரே தமிழில்தந்தியை எழுதித் தருமாறுகேட்கும் பொழுது, எமது தமிழ்மக்களில் சிலர் ஆங்கிலத்தில்தான் நாம் அரசினருடன் தொடர்பு கொள்ளுவோமென வரிந்து கட்டுவது தமிழ்மொழியை வேண்டுமென்றே புறக்கணிக்கும் செயலாகு"மென்று எல்லாம் தமிழியக்கப் பிரமுகர் ஒருவர் இச்சம்பவம் குறித்து நமது நிருபரிடம் கூறினர்.

இரகசிய நகரபபாதுகாவலர் தலைமைக் காரியாலயத்தின் உத்தரவுக்கிணங்க திருமலை, மூதூர் தொகுதியிலுள்ள தமிழரசுககட்சிப் பிரமுகர்களின் பட்டியலொன்று மேலிடத்திற்குச் சென்றவாரமே

(8-ம் பக்கம்பார்க்க)

## திரு. ஜோனின் தெரிவுக்கு எட்டுப்பேர் சவால்

### மாநகரசபையில் வழமையான கெடுபிடிப் போர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**யாழ்ப்பாணம் மேயர் திரு. பி. எம். ஜோனின் தெரிவை ஆட்சேபித்து, அவரது தெரிவு சட்டவிரோதமானது என்று மாநகரசபையில் தீர்மானம் கொண்டு வரப்படவிருக்கிறது. யாழ்ப்பாணம் மாநகரசபையில் எட்டுப்பேர்கொண்ட பெரும்பான்மைக்குழு நேற்று மாலை கமிஷனர் திரு. டி. டி. ஜயசிங்காவிடம் இது சம்பந்தமான தீர்மானமொன்றைச் சமர்ப்பித்தது.**

அத் தீர்மானத்தில் மேயர் தெரிவு மாநகரசபையின் 1947-ம் ஆண்டு 18 (2) ஏ, பி. சட்டத்திற்கு முரணானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை புதிய மேயராக திரு. ஜோன் திருவுளச் சீட்டுமூலம் தெரிவு செய்யப்பட்டார். அவர் தெரிவு செய்யப்பட்டு நான்கு நாட்களுக்குள் அவரது தெரிவு பிழையானது என்று தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. மேயர் தெரிவு சம்பந்தமான ஆட்சேபனை நீதிமன்றத்திற்கும் கொண்டுவரப்படவிருப்பதாகத் தெரிகிறது. மேயர் தெரிவு சட்டத்திற்கு முரணானது என்னும் ஆட்சேபனையில் திருவாளர்கள் ஜே. எஸ். அழகையா, ஏ நடராசா, எம். ஜேக்கப். டி. எஸ். துரைராசா, டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் பீ. ச சோமசுந்தரம், சோ. இரத்தினம், என். டி. செல்லத்துரை ஆகிய எட்டுப்பேரும் கைச்சாத்திட்டுள்ளனர். அவசரமாக ஆட்சேபனை கொண்டு வரப்படுவதற்குரிய காரணம் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு கூட்டமே எனச் சொல்லப்படுகிறது.

சபையில் இரண்டு வாக்கெடுப்பு நடத்தி ஒவ்வொரு அங்கத்தவருக்கும் இரண்டுதடவை வாக்களிக்கக்கூடியதாக இரண்டு வாக்குகளைக் கொடுத்தது சட்டத்திற்கு மாறானது என்பதே பிரச்னை. அன்றியும் பெரும்பான்மைவாக்குகள் மாறாகக் கொடுக்கப்பட்டிருந்தும் ஒருவர் தெரிவுசெய்யப்படுவது முறையற்றது. கமிஷனர் ஒரே வாக்கெடுப்பில் இரண்டு அபேட்சகர்களில் தனித்தனி எவருக்கு எந்தெந்த அங்கத்தவர்கள் தங்கள் ஒரேவாக்கைக் கொடுக்கிறார்கள் என்று அறிந்து பெரும்பான்மை வாக்கால் மேயர் தெரிவை நிர்ணயிப்பது தான் சட்டபூர்வமான நடவடிக்கை. இதற்குமாறாகநடந்த தேர்தலில் முடிவை ஆட்சேபித்துத்தான் இந்தத் தீர்மானம் சடைக்கு வருகிறது என்றும் செய்யப்படுகிறது.

### நாளை பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சத்தியாக்கிரக நினைவு தினத்தையொட்டியும்அவசரகாலம் பிறப்பிக்கப்பட்ட இரண்டாவது ஆண்டு முடிவையும் யொட்டியும் பொதுக்கூட்டமொன்றினை தமிழரசுக கட்சி நாளை மாலை யாழ்ப்பாணத்தில் நடத்தவிருக்கிறது. கோட்டைமைதானத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமைவகிப்பார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கட்சி எம். பி.க்களுடன் வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்து கொள்வர். குளப்பிட்டிச் சந்தி, ஆனைக்கோட்டை, அரியாலை, திருநெல்வேலி, நல்லூர் ஆகிய இடங்களிலிருந்து ஊர்வலங்கள் புறப்பட்டு கோட்டை மைதானத்தை வந்தடைவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தமிழரசுக்கட்சியினர் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை இ. போ. சவுடன் செய்துள்ளதாகத் தெரிகிறது.

## "யாழ்ப்பாண நகரம் புதிய நகரமாகவேண்டும்"

### மேயருக்கு எம். பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"ஆறுமாத காலத்துக்குள் யாழ்ப்பாண நகரத்தை ஒரு புதிய நகரமாக்க மேயர் திரு. ஜோன் முயற்சியெடுக்க வேண்டும். பொதுமக்களின் கஷ்டங்களை நீக்குவதில் புதிய மேயர் முனைவார் என நான் எதிர் பார்க்கின்றேன்."

யாழ்ப்பாணம் மேயராக திரு. பி. எம். ஜோன் தெரிவு செய்யப்பட்டதை முன்னிட்டு அவருக்கு குருநகர் மக்களினால் அளிக்கப்பட்ட பொது வரவேற்பொன்றில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தாம் மாநகரசபை முதல்வராக விருந்தபொழுது, யாழ்ப்பாண பட்டினம் எவ்வளவு முன்னேற்றமாக இருந்ததோ அதற்கு மேலான ஒரு முன்னேற்றத்தை உண்டாக்குவதில் புதிய மேயர் தம்மாலான முயற்சிகளை செய்வார் என்றே தாம் எதிர் பார்ப்பதாகவும், யாழ்ப்பாண நகர மின்சாரத்தையும்,வீதிகளையும், வீடமைப்புத்திட்டங்களையும் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையானவற்றை அவர்களுக்குரிய கஷ்டங்களை தீர்பபதற்கு, தேவைப்படும் சமயத்தில் அரசாங்கத்திடமிருந்து கடனும் உதவியும் பெற்றுத் தருவதில் தாம் எப்பொழுதும் ஆயத்தமாகவிருப்பதாகவும் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

(8ம் பக்கம் பார்க்க)

## உடுவில் கிராமசபை அறிவித்தல்

இதன்பின்னுற் காணும் வேலைகளை ஒப்பந்தத்தில் எடுத்துச் செய்வதற்கு ஒப்பந்தகாரரிடமிருந்து 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிவரையும் சீல் வைத்த ரெண்டர்கள் அழைக்கப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை பிழையில்லாமல் நிரப்பி கிராமச் சபைகந்தோரில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் ரெண்டர் பெட்டியில் போடலாம். அல்லது பதிவுத்தபால்மூலம் கிராமசபைத் தலைவருக்கு அனுப்பலாம், அல்லது ஏப்ரல்மாதம் 27-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குக் கிராமசபை மண்டபத்தில் கூடும் சபையின் கூட்டத்தில் கொடுக்கலாம். கேள்விப்பத்திரங்களை அடைத்து அனுப்பும் என்வலப்பின் இடதுபக்கத்தில் "கிராம வேலைகளுக்கு ரெண்டர்கள்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வேலையின் கேள்விப்பத்திரத்துக்குப் பிணையாக ரூபா 25-ம், கேள்விப்பத்திரத்தின் கிரயமாக ரூபா 2-ம் கட்ட வேண்டும். கிரயம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் ஏப்ரல் மாதம் 26-ம் திகதி பகல் 12 மணிவரையும் கொடுக்கப்படும்.

ரெண்டர்பத்திரத்தில் செய்யும் எவ்வித திருத்தங்களும் ரெண்டர் கேட்பவரின் கையொப்பத்தால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

கிராமசபைத் தலைவரால் ரெண்டர்கள் ஏற்கப்பட்டதென்று அறிவித்தல் கொடுத்த தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் ஒப்பந்தம் எழுதி வேலையை ஆரம்பிக்காத எந்தக் கேள்விக்காரரின் பிணைபணமும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**வேலைகள்**

1. சுன்னாகம் சந்தையில் மலகூடம் கட்டுதல்.
2. உடுவில் 5-ம் வட்டாரத்தில் கிணறு வெட்டுதல்.
3. உடுவில் குளத்தடியில் சலவைத் தொழிலாளருக்குத் தங்குமடம்.
4. சங்குவேலி கேலன்குளத்தடியில் சலவைத் தொழிலாளருக்குத் தங்குமடம்.
5. சுன்னாகம் எண்ணன் குளத்தடியில் சலவைத் தொழிலாளருக்குத் தங்குமடம்.

பொ. சபாபதிப்பிள்ளை
காரியதரிசி,
(தலைவருக்காக)
உடுவில் கிராமசபைக்கந்தோர்,
சுன்னாகம்.
11-4-63 905

## யாழ்ப்பாண மாநகரசபை கேள்விப் பத்திர அறிவித்தல்

11-ம் வட்டாரத்தில் உள்ள கலீபா அப்துல்ஹமீத் வீதிக்குச் சீமெந்து கொங்கிறீற் வடிகால் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அரசாங்க அல்லது ஓரளவு அரசாங்க திணைக்களங்களில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து 1963-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பிணைப்பணமாக ரூபா ஐம்பதையும் (50|-) அத்துடன் திரும்பப் பெற முடியாத ரூபா ஐந்து (5/-) கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாகவும் செலுத்தி, 1963-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23-ம் திகதி பிற்பகல்3-00 மணிவரை மாநகர மராமத்து இஞ்சினியரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகள் முப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தெரியப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதும் கேள்விப் பிணைப்பணம் திருப்பித் தரப்படும்.

3. தேவைப்படும் இதர விபரங்களை, அலுவலக நேரத்தில் யாழ்ப்பாண மாநகர மராமத்து இஞ்சினியரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

டி. டி. ஜெயசிங்கா
ஆணையாளர்
யாழ்ப்பாணமாநகரசபை
மாநகரமண்டபம்,
10-4-1963. 897

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரிலிருந்து சிறிது தூரத்தில் தென்னை, பனை, மாமரங்களும், கிணறும் பாதையுமுள்ள பத்துப் பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. இதை நாலாகப் பகிர்ந்து வாங்கலாம். ஒரு பரப்பின் விலை இரண்டாயிரம் ரூபா. இரண்டரைப் பரப்புக் காணியை வாங்கும் ஒருவர் அதன் முழுவிலையின் அரைவாசித் தொகையை முதலில் கொடுத்து மிகுதியை மாசம் நூறு ரூபா வீதம் கொடுக்கலாம். செல்லத்துரை, 271, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 857

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. **வைத்தியர் பரிபூரணானந்தர்** கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு

கொக்குவில் காங்கேசன் துறை வீதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு அருகாமையிலிருக்கும் சம்பியன் ஒழுங்கையில் (பிரதான வீதியிலிருந்து 50 யாருக்குள்ளாக) நவீன மின்சார, தண்ணீர் வசதியுள்ள 'ராஜகம்'என்னும் வீடு வாடகைக்கு விடப்பட இருக்கிறது. தேவையானோர் நேரிற் சந்திக்கவும். 'கமலவாசா', நந்தாவில், கொக்குவில். 898

### தேவை

பண்டத்தரிப்பு கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (அ) பதவி: உதவி. பேக்கர் (ஆ) வயது: 25—30 (இ) சம்பளவிகிதம் 140—200 / 12 X 5

(ஈ) தகைமை கள்: பாண் போறணை அலுவல்களில் 5 வருட அனுபவமும், சிறப்பாக எல்லாவகை பிஸ்கட்டுகள் செய்வதில் கைதேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்ப முடிவு திகதி: 25-4-63. நீ. யேம்ஸ், தலைவர், பண்டத்தரிப்பு கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பண்டத்தரிப்பு. 883

### திருமண அறிவித்தல்

மணல்தறையைச் சேர்ந்த செல்வி **தம்பையா ஜெயலட்சுமிக்கும்**, ஹோமியோபதி டாக்டர் திரு. **வைத்திலிங்கம் தில்லைச்சந்திரனுக்கும்** (F. A. H), கடந்த எட்டாம் திகதி செல்வச்சந்நிதியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. 903

## மருதடி விநாயகர் தேர்த்திருவிழா

சுழிபுரம், திங்கள்

மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்த்திருவிழா வைபவம் புத்தாண்டு தினத்தன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தோத்திருவிழா வைபவத்தைக் கண்டு களித்தனர்.

## உப்புவெளிச் செய்திகள்

உப்புவெளி மெதடிஸ்த கலவன் பாடசாலையில் சைவப் பிள்ளைகளும் முஸ்லிம் பிள்ளைகளும் சமமாக கல்விகற்கின்றபடியால் இந்தப் பாடசாலையை இருபாடசாலைகளாக பிரித்துத் தரும்படி உப்புவெளிக் கிராம சபை கல்விமந்திரியை கேட்டுள்ளது.

2-வது மகாயுத்தத்தில் அழிந்துபோன உப்புவெளிக் காளி கோயிலை புனருத்தாரணஞ் செய்ய உப்புவெளிக் கிராமமக்கள் முன்வந்துள்ளனர். இதற்காக அரசினர் காணியொன்றும் வழங்கியுள்ளனர்.

உப்புவெளிக் கிராம எல்லைக்குள் திருமலை நகரசபை தனது வட்டார எல்லையை விஸ்தரிப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று கூறும் கடிதமொன்றை உப்புவெளி கிராமசபை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பியுள்ளது.

கொழும்பிலிருந்து திருமலைக்கும்,திருமலையிலிருந்து கொழும்பிற்கும் திருமலையில் இருந்து குருணகலைக்கும், குருணகலையிலிருந்து திருமலைக்கும் இரு புதிய நேரடி பஸ் சேவைகள் இம்மாதம் 6-ம் திகதியிலிருந்து ஆரம்பமாகி 20-ம் திகதிவரை நடைபெறுகின்றது.

தம்பலகமம், கந்தளாய், மூதூர், கிண்ணியா ஆகியபகுதிகளில் தற்பொழுது ஆரம்பமாகியுள்ள கோடைவேளாண்மைக்கான விதைப்பு வேலைகட்கு கூலியாட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிகின்றது.

## சமஸ்கிருத அறிஞர் மறைவு

டார்ஜீலிங், ஏப். 15

பிரபல சமஸ்கிருத அறிஞர் ராகுல் சங்கிருத்தியாயன தமது 70-வது வயதில் நேற்று டார்ஜீலிங்கில் காலமானர். இந்தி, சமஸ்கிருதம், பாளி திபெத்திய மொழி ஆகியவைகளில் 160-க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.

இந்தி இலக்கியத்துக்கும் பௌத்தத்துவத்துக்கும் ராகுல் சங்கிருத்யாயனவின் மறைவுக்கு ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணனும் பிரதமர் நேருவும் அனுதாபந்தெரிவித்து வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் தெரிவித்துள்ளனர்.

## 'தீட்சை மனிதனை புனிதமாக்குகிறது'

யாழ்ப்பாணம், சனி

'சமயதீட்சை பெறுபவர்கள் தான் சைவசமயப் பிரவேசம் செய்கிறார்கள். சமயதீட்சை பெற்றவர்கள் எப்பொழுதும் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூவகைக் கருமங்களையும் நிறைவேற்றவேண்டும்.'

இவ்வாறு சென்ற புதன் கிழமை நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகராலயத்தில் இலவச தீட்சையை நிறைவேற்றிவைத்த பிரம்மஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள் குறிப்பிட்டார்.

அகில இலங்கை பொதுசன சேவைச் சங்க சமயப் பிரசார சபையின் ஆதரவில் நடைபெற்ற மேற்படி இலவச தீட்சை வைபவத்தில் செயலாளர் திரு. த. இராசரத்தினம் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

சமய ஆசாரங்களையும் சமயக் கொள்கைகளையும் உணர்ந்து கடைப்பிடிக்க தீட்சைபெறுவது அவசியம். தீட்சை நம்மைப்புனிதர்களாக்கிக் கடவுள் தன்மையையடைய வழிவகுக்கும் மார்க்கம். தீட்சை துணிவையும் கொடுக்கிறது என்பதற்கு நாவலர் பெருமான் சாட்சி. அவர் தீட்சைபெற்றிருந்ததால்தான் யாருக்கும் அஞ்சாது வாழ்ந்தார்."


நாளுக்கு
நாள்
கடின பாவனைக்கு
நிகரற்று
விளங்குவது.




கனபோ
பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவிநியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட்-மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/11

# லோக சபையில் அமளி துமளி!

## எம். பி. க்கள் இருவர் வெளியேற்றப்பட்டனர்

புதுடில்லி, ஏப்ரல் 15
சபையின் சரித்திரத்திலேயே இதுவரை நடைபெற்றிருக்காத மிக மோசமான ஓர் சம்பவம் நேற்றைக்கு முதல்நாள் நடைபெற்ற லோக சபையின் கூட்டத்தில் நடைபெற்றது. சபாநாயகரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்த இரண்டு அங்கத்தினர்கள், ஒருவர்பின் ஒருவராகப் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

உள்துறை மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி ஆட்சிமொழி மசோதாவைப் பிரேரிக்கவிடாமல் இந்த இரண்டு அங்கத்தினர்களும் சபை நடவடிக்கைகளைத் தடுத்துக்கொண்டிருந்ததைத் தொடர்ந்து வெளியேற்றப்பட்டனர். உள்துறைமந்திரியின் மசோதா மூலம் 1965-ம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலத்தை நீடிக்கச் செய்யும் முயற்சியை எதிர்த்து சபைக்கு வெளியிலும் டாக்டர் லோஹியா தலைமையில் சோஷலிஸ்ட் ஜனசங்க அங்கத்தினர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சோஷலிஸ்ட்டைச் சேர்ந்த திரு. மணிராம்பக்ரிக்கும், ஜனசங்கைச் சேர்ந்த ஸ்வாமி ராமேஸ்வரானந்துக்கும் வெளியேற்ற உத்தரவு கிடைத்ததும் சபாநாயகரின் உத்தரவுக்குக் கீழ்ப்படியாது அவரையும் அவர்கள் எதிர்த்தனர். பின்னர் காவல்படையினரின் உதவியுடன் வெளியேற்றப்பட்டனர். இதற்குமுன்னர் சோஷலிஸ்ட், ஜனசங் அங்கத்தினர்கள் பார்லிமெண்டரி சம்பிரதாயங்களை மீறி சபையின் கௌரவத்தையும் பார்க்காது கூச்சலிட்டுக் கைகாட்டிப்பேசினர். சபாநாயகரைப் பார்த்து முஷ்டியை மடக்கி சவால்விட்டனர். ஒழுங்கை நிலைநாட்ட சபாநாயகர் நியாயமாகப் பேசியது, ஆக்கிரோஷமான கூச்சல்களுக்கிடையில் எடுபடாமல் போய்விட்டது.

ஆங்கிலத்தை நீடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாகவே சபையில் அமளி துமளிஏற்பட்டது.

# ஐக்கிய அரபுக் குடியரசு அரசியல்திட்டம் அங்கீகாரம்

கெய்ரோ, ஏப்ரல் 15
எகிப்து, சிரியா, ஈராக் ஆகிய நாடுகளைக் கொண்ட புதிய ஐக்கிய அரபுச்குடியரசுக்கான அரசியல் சாஸன அமைப்புச் சம்பந்தமாகமூன்று நாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இறுதி உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக ஐக்கியஅரபுக் குடியரசுப்பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரி தெரிவித்தார்.

ஒரே தலைமையின்கீழ் மூன்று நாடுகளுக்கும் பொதுவான படையொன்று அமைக்கப்படுமென்றும் பொதுவான வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கப்படுமென்றும் அலிசாப்ரி தெரிவித்தார்.

புதிய ஐக்கியஅரபுக் குடியரசு அமைப்பு சம்பந்தமாக எகிப்து, ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. வாக்கெடுப்பு முடிவடைந்ததும் புதிய ஐக்கியஅரபுக் குடியரசு உதயமாகும்.

—

## மலேசியாவின் பெரும் கூட்டுக் கட்சிகள்

கோலாலம்பூர், ஏப்ரல் 13
மலேயாக் கூட்டாட்சி, சிங்கப்பூர், சரவாக், வடபோர்னியோ, புருணை ஆகிய நாடுகளைச் சேர்ந்த 12 பெரிய அரசியல் கட்சிகள் ஒன்றாகக் கூடி மலேயாசியாவின் பெரும் கூட்டுக் கட்சியாக இணைந்துள்ளன. இந்த இணைப்புக் கூட்டத்திற்கு இக்கட்சிகளைச் சேர்ந்த 52 பிரதிநிதிகளும் 12 பார்வையாளர்களும், 5 விசேட பிரதிநிதிகளும் வந்திருந்தனர். இக்கட்சி மலாயாசியாவின் "மாபெரும் சக்திவாய்ந்த ஆளுங்கட்சியாக" இருக்கும் என்று மலேயப் பிரதமரும், மேற்படி கூட்டுக் கட்சியின் மலாயாத் தலைவருமான துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

—

## அல்ஜீரிய மந்திரி சுடப்பட்டார்

அல்ஜியர்ஸ், ஏப். 13
அல்ஜீரியா வெளிவிவகார மந்திரி எம். முகம்மது கெமிஸ்ட்டி அல்ஜீரிய சட்டசபேக் கட்டிடத்திலிருந்து நேற்று வெளியே வந்தசமயம் அல்ஜீரியர் ஒருவர் அவர் கலையைக் குறிவைத்துச் சுட்டார். மந்திரி கீழே விழுந்து இரத்த வெள்ளத்தில் கிடக்கக் காணப்பட்டார். அவரின் நிலைமைபற்றித் தகவல் தெரியவில்லை.

## பெர்லின் எதிர்காலம்

### அமெரிக்கா-ரஷ்யா பேச்சுவார்த்தை

வாஷிங்டன் ஏப்ரல் 13
பேர்லின் நகரின் வருங்காலம் பற்றி நேற்று அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே இங்கு பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இரு நாடுகளிடையேயும் இதுபற்றிய பேச்சுவார்த்தைகள் கடந்த 18 மாதங்களாக இடையிடையே தொடர்புகள் விடப்பட்டு நடைபெற்று வந்துள்ளன.

—

## கடற்படை நீதிமன்ற விசாரணை

வாஷிங்டன், ஏப்ரல் 13
நீருள் மூழ்கிவிட்ட அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் சம்பந்தமாக கடற்படை நீதிமன்றம் விசாரணை நடத்த விருக்கிறது.

அட்லாண்டிக்கடலில் மூழ்கிவிட்ட இந்த நீர்மூழ்கியில் சென்ற 129 பேரின் கதிஎன்னவாயிற்று என்பது பற்றி இன்னும் அறியப்படவில்லை.

நீர்மூழ்கிக்கப்பல் மூழ்கியது சம்பந்தமாக விசாரணை நடத்துவதால் இனி இவ்வித சம்பவங்கள் இடம்பெறாது தடுக்க வழிவகைகள் ஆராயப்படலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

—

கான்பெரா, ஏப்ரல் 13
ஆஸ்திரேலியா நேற்று ராக்கெட் ஒன்றை வானவெளிக்கு அனுப்பியது.

144 ருத்தல்நிறையுள்ள இந்த ராக்கெட்டை அமெரிக்க உதவியோடு அவுஸ்திரேலியா வானவெளிக்கு அனுப்பியுள்ளது.

ராக்கெட்டில் மீண்டும் திரும்பி வருவதற்கான கருவிகள் அதில் பொருத்தப் படாததால்அது பூமிக்குத் திரும்பி வராதுஎன அறிவிக்கப் பட்டுள்ளது.

## இரணிய கசிபு இருந்த நகரம்

லக்னோ, ஏப். 15
இரணியனின் சகோதரன் என்று புராணங்கள் கூறுகின்ற இரணிய கசிபுவின் நகரம் என்று கருதப்படும் பண்டைய நகரம் ஒன்றை, காசி மாவட்டத்தைச் சேர்ந்த பிரகலாத்பூர் என்னுமிடத்தில் தோண்டி எடுத்திருக்கிறார்கள். காசி இந்துப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் இதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கங்கையின் போக்கை மாற்றி விவசாயத்துக்குத் துணைபுரியத்தக்க விதத்தில் கட்டப்பட்ட கால்வாய்ச் சுவர் ஒன்று இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சுவர் பெருந்தரமான செங்கற்களைக்கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. பழுப்பு நிறமான முழுத் தட்டு, செங்கற்சுவர்கள், சுட்ட மண்ணாலான சில்லுகள், கரிந்துபோன தானிய மணிகள் ஆகியனவும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## கிராமத்துக்கொரு பள்ளிக்கூடம்

சென்னை, ஏப். 14
தமிழ் நாட்டில் முன்னூறும் அதற்கும் மேற்பட்ட ஜனத்தொகை உள்ள கிராமம் ஒவ்வொன்றிலும் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. தற்போது தமிழ் நாட்டில் 29010 ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. 1961-62-ம் ஆண்டில் 28380 பள்ளிகளே இருந்தன.

மேற்படி ஆரம்பப் பள்ளிகளில் 41 லட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்றனர். இது சென்ற ஆண்டு மாணவரின் எண்ணிக்கையைவிட 4 லட்சத்து 80 ஆயிரம் அதிகமாகும்.

ஆறு வயது முதல் 8 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டாய இல்வசக் கல்வியளிக்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் நடைமுறையில் இருக்கிறது. எட்டு முதல் 9 வயது வரையிலான பிள்ளைகளுக்கு மாநிலத்தில் மூன்றிலொரு பகுதியில்மட்டும் கட்டாய இலவசக் கல்வி தரப்படுகிறது.

ஆறு முதல் 11 வயதுவரையிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வித் திட்டம் மூன்ரும் திட்ட இறுதிக்குள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

நடைமுறை ஆண்டில் 6 முதல் 11 வயதுள்ள 3 லட்சம் பிள்ளைகளைச் சேர்க்கவும் 6600 ஆசிரியர்களை நியமிக்கவும் அரசாங்கம் ஆலோசித்துவருகிறது.

ஆரம்பப் பள்ளிகளில் ஏராளமான பிள்ளைகள் சேருவதற்கு, இலவசக் கல்விதருவது, மதிய உணவு, சீருடை அளிப்பு ஆகியனதாம் ஓரளவுக்கு காரணமாகும்.

—

## மலையேறும் பெண்கள்

கல்கத்தா, ஏப். 15
பெண்களுக்கு மட்டும் தனியாக மலையேறும் பயிற்சியை, டார்ஜிலிங்கிலுள்ள இமாலய மலையேறும் கழகம் 1962-63-ல் அளித்தது. 20 ஆயிரம் அடி உயரமுள்ள ஃபிரே சிகரத்தின்மீது பயிற்றி பெற்ற பெண்கள் ஏழு பேரில் ஆறு பேர் ஏறினா. இக்கழகம் மலையேறுவதில் அடிப்படைப் பயிற்சியும், உயர்மட்டப் பயிற்சியும் அளித்துவருகிறது. 1954ல் தொடங்கப்பட்ட இக்கழகம் இதுவரையில் 46 பயிற்சி வகுப்புகள் நடத்தியிருக்கிறது.

# தமிழ்நாட்டுசெய்திகள்

## சீன காவற் கைதிகள்

சென்னை, ஏப்ரல் 14
அதிகமான சீன காவற் கைதிகளை ஏற்றிக்கொண்டு இரண்டு சீனக் கப்பல்கள் நேற்று மாலை சென்னை துறைமுகத்திலிருந்து வெளியேறின. 908 காவற் கைதிகளில் சுமார் 300 பேர் குழந்தைகள். ராஜஸ்தானில் தியோலிலிருந்து இவர்கள் விசேஷ ரயில்மூலம் இங்கு வந்தனர். விசேஷ ஆயுத பொலிஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்து.

## 'சுயமரியாதை இயக்கம்'

திருச்சி, ஏப்ரல் 15
திருச்சியில் மே மாதம் 12-ம் திகதி நடக்கவிருக்கும் மகாநாட்டில், "சுயமரியாதை இயக்கம்" அமைக்கப்படவிருக்கிறது. திராவிடக் கழகத்தின் பிரமுகர்கள் இதில் சேருவர். புதிய இயக்கம், சமூக சீர்திருத்தத்தில் மட்டுமே ஈடுபடுமென்றும் அரசியலில் ஈடுபடாது என்றும் திரு. வேதாசலம் கூறினர்.

## கொழும்புக்கு பயணம்

சென்னை, ஏப்ரல் 15
சென்னை அரசாங்கத்தின் உள்துறை காரியதரிசி திரு. ஆர் எப். இஸார், தமது மனைவியுடன் கொழும்புக்கு பயணமானர்.

## உணவில் விஷ கலப்படம்

சென்னை, ஏப்ரல் 15
உணவில் விஷ கலப்பட அறிகுறிகளுடன் 23 பேர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## ரண சிகிச்சை கருவிகள் உற்பத்தி

சென்னை, ஏப்ரல் 15
சென்னைக்கு அண்மையிலுள்ள நந்தன்பாக்கம் என்னுமிடத்தில், ரண சிகிச்சைக்கான கருவிகளை உற்பத்தி செய்வதற்காக அரசாங்கத்துக்குச் சொந்தமாக நிறுவப்படும் தொழிற்சாலை, 1964-ம் ஆண்டு இறுதியில் உற்பத்தியை ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

## பிள்ளை பிடிப்பவராம்!

காவேரிபாக்கம், ஏப்ரல் 15
செங்கற்பட்டு ஜில்லா வள்ளமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த 28 வயதுள்ள துரைசாமியை, பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் பிள்ளை பிடிப்பவர் என சந்தேகிக்கப்படுகிறார். தாடியுடன் இருந்த இந்த நபர், ஒரு குழந்தைக்கு மிட்டாய் கொடுத்துக்கொண்டிருந்தாரென்றும் அப்பொழுது கைதுசெய்யப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

## அருவிகளிலிருந்து மின் விசை

சென்னை, ஏப்ரல் 15
சென்னை மாகாணத்தில், மின்சார உற்பத்திக்காக பெரிய நீர்வீழ்ச்சிகள் எல்லாம் அநேகமாக பயன்படுத்தப்பட்டுவிட்டதால், எதிர்காலத்தில், சிறிய அருவிகளின் நீர்வீழ்ச்சிகளைப் பயன்படுத்த முடியுமா என்பதை சென்னை அரசாங்கம் பரிசீலிக்குமென்று தெரியவருகிறது.

## 'ஒதுக்கிய பணத்தை பயன்படுத்தவில்லை'

சென்னை, ஏப்ரல் 15
"வேலையிழந்த பொற்கொல்லர்களை மாற்று வேலையில் அமர்த்துவதற்காக சென்னை அரசாங்கம் ஒதுக்கியுள்ள எட்டு லட்சம் ருபா பயன்படுத்தப்படாமலிருந்துவருகிறது. தொழில் பயிற்சி கழகத்தில் அவர்களுக்கு செய்துகொடுக்கப்பட்டுள்ள வசதியையும் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முன்வரவில்லை" என்று தொழில் மந்திரி திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

# "மனிதப் பண்புள்ள சமுதாயம் உருவாக வேண்டும்"

## கோண்டாவில் மேற்கு சனசமூக 24-வது ஆண்டுவிழாவில் பேச்சு

கோண்டாவில், திங்கள்
"மனிதசமுதாயம் மனிதப் பண்புள்ள சமுதாயமாக அமைய வேண்டும். அப்பொழுதான் போட்டியும் பூசலும் மறைந்து உண்மையான ஒற்றுமை நிலவி, சமுதாயம் முன்னேறும். அதற்கு சமய, சன்மார்க்கநெறிகள் சமுதாய அமைப்பின் அத்திவாரமாக அமைய வேண்டும்."

கோண்டாவில் மேற்குகிராம முன்னேற்றச்சங்க-சனசமூக நிலையங்களின் 24-வது ஆண்டு விழாவின் முதலாவது நாள் நிகழ்ச்சிகளில் கலந்து உரையாற்றிய திரு. சி. கதிரவேற்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர். விழா புதுவருடத்தினதன்று தொடங்கி மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது. திரு. கதிரவேற்பிள்ளை தொடர்ந்து பேசியதாவது:

கடவுள் நம்பிக்கை ஒரு மனிதப்பண்பு சமயப் போட்டியின்றி வாழும் பண்பு சைவசமயத்தில் உண்டு. ஒருவனே தேவன் என உணர்ந்துகொண்டால் வேதஆகமங்களின் உண்மையை அறிந்துகொண்டால் இறைவன்பற்றிய உண்மை விளங்கிவிடும்.

இன்றைய சமூகம், சமய சனமார்க்க, அரசியல், பொருளாதார இயல்களில் அவற்றின் விருத்தியில் பொறுதவுளது. அரசியல் துறையில் ஒற்றுமை அவசியம் தேவைப்படுகிறது. ஒற்றுமை என்ருல் வலிமையமிக்கவர்கள் கருத்தை மற்றவர் ஏற்பதல்ல. உண்மைறை உணர்ந்து, அந்த உணர்வின் மூலம் கருத்தை விளங்கி நடக்க முயலும்போதுதான் உண்மை ஒற்றுமை ஏற்படும். சிங்கள-தமிழ் மக்கள் பிரச்னையும் இவ்வண்ணம் தீர்க்க வேண்டிய ஒன்றேயாகும். ஒருவர் மற்றவரைச் சுரண்டாமல், தீமை விளைவிக்காமல், சமானதானமாக வாழ வழிவகுக்க வேண்டும்.

கூட்ட ஆரம்பத்தில் அம்பலவாணசுவாமிகளின் உருவப் படத்தை பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை திரை நீக்கம் செய்துவைத்துப் பேசியதாவது:

"அம்பலவாண சுவாமிகள், ஒரு நடமாடுங் கோயிலாக, இறைவன் உறையும் உள்ளக் கோயில் கொண்டவராக இருந்தார். மற்றோரின் புகழையும் இகழையும் பொருட்படுத்தாது, தாம் சிந்தித்துத் தெளிந்த உண்மை வழி நடந்தார். தமது நிறைகுறை மறிந்து துணிபு கொண்டவா. அவருக்கு விழா எடுப்பது மிகவும் பொருத்தமானது.

திரு. குமாரசாமிப்புலவர் கூட்டத்துக்குத் தலைமை வகித்

(5-ம் பக்கம் பார்க்க)

## மணி வாக்கு

கடமைகளே உரிமைகளுக்கு உண்மை அடிப்படை. நாமெல்லாம் நமது கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் தாமே கிடைக்கும். கடமைகளைச் செய்யாமல் உரிமைகளை மட்டும் நாடினல், அவை கானல்நீர்போலாகி விடக்கூடும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 3 உ (16-4-63)


## தமிழ் மறுமலர்ச்சி

தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்து நடத்திவரும் 'எல்லாம் தமிழ் இயக்கம்' இப்போது மேலும் நீடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த இயக்கம் இங்கு தமிழ் மறுமலர்ச்சிக்குக் கண்கண்ட ஓர் அடையாளமென்றே நம்புகிறோம். இவ்வகையிலே இக்கட்சியினர் எடுத்துக்கொண்டுள்ள இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது. தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழ் இலட்சியங்கள் இவற்றின் அபிமானிகள் எங்கிருப்பினும்சரி, இலங்கையிலே இந்த இயக்கம் தமிழை அதற்குரிய ஸ்தானத்துக்கு உயர்த்திப் பலப்படுத்த உதவுமென்றே நம்பிக்கையுடன் விரும்புவார்கள்.

செந்தமிழுக்கு யாழ்ப்பாணமே உறைவிடமென்று கூறுவர். பாரதநாட்டிலுள்ள தமிழர் உள்ளிட்டு அந்நியர்கள் பலரும் ஈழத்துத் தமிழ் மொழியை அவ்வப்போது பெரிதும் போற்றிப் பாராட்டி வந்துள்ளனர். உலகத்திலே உயிருடன் உள்ள மிகப் பழமையான மொழி தமிழே. ஈழத்திலும் தமிழரே ஆதிமுதல் வசித்துவந்துள்ளதால், தமிழே ஈழத்தின் மிகப்பழமையான மொழி என்பதும் நம் கருத்து. மற்றச் சமூகத்தினரும், வேறு தமிழர்களும் பின்னர் அடுத்தடுத்து இங்கு குடியேறி இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டனரென்று சரித்திரம் கூறும்.

உலகத்து முக்கிய சமயங்களான இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலியவற்றுக்கு தமிழ்மிக நல்ல பணிபுரிந்துள்ளது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான தமிழ்மொழிக்கும் பண்பாட்டுக்கும் புத்துயிர் அளித்தார்கள். அவர் இலங்கையிலே செய்த சேவை தமிழ் கலாசாரத்துக்கும், மறுமலர்ச்சிக்கும் மகத்தான போற்றத்தக்கபணியாகும். தமிழையும் அதன் கலாசார மேன்மைகளையும் பற்றி எழுதுவதாயின், அது பலநூல்களாகவும் விரியும். அப்பேர்ப்பட்ட தமிழ் மொழி, கலாசார, இலட்சியங்களைப் புதுப்பிக்கச் செய்யும் இம்முயற்சிகள் பெரிதும் போற்றத்தக்கன.

நமது புராதனமான பாரம்பரியத்தையும், மொழி, கலாசாரம் இவற்றையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இப்போதுள்ள பரம்பரைக்கு எப்படி உண்டோ, அதேபோல, இலங்கையிலுள்ள இன்றைய அரசியல் நிலையிலே இங்குள்ள தமிழ் மக்கள் தாங்கள் வழிவழியாகப் பெற்ற இப்புராதனச் செல்வத்தை, குன்றுது குறையாது எதிர்கால சந்ததியினருக்கும்கிடைக்கும்படி செய்ய மகத்தான முயற்சிகள் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். உலகிலே தமிழராகப் பிறந்து அவ்வளவு மேன்மையான மொழிச் செல்வத்தைப் பெற்றிருப்பது மிகவும் பெருமைப்படத்தக்கதல்லவா? அத்தகைய நமது தாய்மொழிக்கு இலங்கை அரசியல் வாழ்விலே தாழ்வான ஓர் இடம் கிடைக்கும்படி நாம் அனுமதிக்க முடியுமா?

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்றும் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகைசெய்தல் வேண்டும் என்றும் முழங்கினர் மகாகவி பாரதியார். "எல்லாம் தமிழ் இயக்க"த்தார், இதை இரண்டொரு வாரங்களுக்கு மட்டுமன்றி, நிரந்தரமான அடிப்படையில் விரிந்த வேலைத் திட்டத்துடன் அமைப்பார்களென்றே நம்புகிறோம். மொழி மட்டுமன்றி தமிழ்ப் பண்பாடு பாரம்பரியம் இவற்றை வளர்க்கும் முறையிலும் இத்திட்டத்தை அமைத்து அதன்படி காரியங்கள் செய்ய முற்படுவது தமிழர் அனைவரின் கடமையாகும். தமிழைத் தமிழர் பேணவிடில், அது எப்படிப் பாதுகாக்கப்பட்டு வளர முடியும்?

இந்த இயக்கம் மற்றவர்களுக்கு மாறுகவும் துவேஷத்தைக் கிளப்பவும் கூடியதென்று சில அரசியல் வட்டாரங்களில் அஞ்சப்படுகிறது. இன்றைய அரசியல் நிலையில் இவ்வித கவலை ஏற்படுவது இயற்கையே. இதை நீக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அதிகாரமும் அரசாங்கத்துக்கே உண்டு. ஏற்கெனவே இந்நாட்டின் அரசாங்க மொழிகளில் ஒன்றென்று தமிழ் அங்கீகரிக்கப்பட்டு பல்லாண்டுகள் அவ்விதமே சரிசமமாக அமுல் நடத்தப்பட்டு வந்துள்ளதை மறவாமல், தேசிய ஒற்றுமையைக் கருதி, அரசாங்கம் தமிழ் மொழிக்குள்ள உரிமையை, இனியும் காலதாமதமின்றி வழங்க முன்வர வேண்டும்.

## மாதர் சங்க நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சி, திங்கள்

துணுக்காய் யோகபுரம் பாரதி கிராமமுன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. மாதர்சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. மாதர் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி பூ இளையதம்பி, உபதலைவா: செல்வி கி. சிவபாக்கியம், செயலாளர்: செல்வி வே. புவனேஸ்வரி, உதவிச்செயலாளர்: செல்வி சி. வே. தெய்வநாயகி, தனதிகாரி: செல்வி அ. மகேஸ்வரி. நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# "நாம் அடிபணிந்தால் எமது மொழி அழியும்"

## தமிழியக்கக்கூட்டத்தில் எஸ்.ஜே.வி

சுழிபுரம், திங்கள்

'இன்றுள்ள அரசாங்கம் தமிழ் பேசும் இனத்தை அழித்து விடுவதற்குப் பலவகையான திட்டங்களைத்தீட்டி அதனை நடைமுறைக்கு கொண்டு வருகிறது. எமது பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றியதுடன் மலைநாட்டு தமிழர்களின் வாக்குரிமைகளையும் பறித்தனர். சிங்களம் மாத்திரம் சட்டத்தை நிறைவேற்றி எமது தாய் மொழியான தமிழை அழிக்க முயல்கின்றனர். சிங்களத்தை எல்லோரும் அறிந்து விட்டால் தமிழர்களை மிகவிரைவில் சிங்களவர்களாக மாற்றிவிட முடியும் என்று எண்ணுகிறார்கள். இத்திட்டத்தை நாம் நிர்மூலமாக்க வேண்டும்' என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் வழக்கம்பரை அம்மன் கோயில் முன்றலில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி தமிழியக்க வார பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். கூட்டத்திற்கு முன்னாள் சொலிஸிட்டர் ஜெனரல் திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி. தலைமைவகித்தார்.

திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"அரசாங்கத்தின் திட்டத்திற்கு நாம் அடிபணிவோமானல் இந்நாட்டிலே தமிழ் பேசும் இனத்தின் தாய்மொழியாகிய தமிழ் அழிந்து போகும் என்பது உறுதி. தமிழ்யக்கம் விரிவடைவதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு செய்தால் தான் நாம் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். எமது கட்சி அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எதிர்த்து வருவதுடன் பல இயக்கங்களையும் நடத்தி வெற்றி கண்டுள்ளது. 1961-ம் ஆண்டு நாம் நடத்திய சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் போன்ற இயக்கங்கள் எமக்குப் பெரும் வெற்றியைக் கொடுத்துள்ளன. அதுபோல் 'எல்லாம் தமிழ் இயக்கமும்' வெற்றியடைய அனைவரும் உதவவேண்டும்.'

வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

தமிழினத்தின் சரித்திரத்தில் பல மேடுபள்ளங்கள் காணப்படுகின்றன. முன்பு எம்மை ஆட்சி செய்த அன்னியர் நசுக்கவில்லை; ஆனல் இன்று ஆளும் சிங்களவர்கள் நசுக்குகிறார்கள். சிங்கள அரசாங்கத்தின் சட்டங்களை எதிர்க்க வேண்டுமெனவும், சிங்கள மக்களுடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும் கூறுவது நடக்க முடியாத செயலாகும். சிங்களமக்களின் எந்த அரசியல் கட்சியாலும் எமக்கு விமோசனமில்லை.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

'தமிழ்த் தாய்மார்கள் தமது தாய் மொழியைக் காக்க ஏன் பின்நிற்கிறார்கள் என்பது தெரியவில்லை. எமது நாட்டின தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கு பெண்கள் கலந்து கொள்ள வேண்டும். இந்திய சுதந்திரத்துக்காக எவ்வளவு பெண்கள் தமது உழைப்பை அர்ப்பணித்தார்கள் என்பதை நன்கு நாம் அறிய வேண்டும். இந்திய சுதந்திரத்துக்காக பாடுபட்ட மகான் காந்திக்கு சத்தியாக்கிரகத்தை ஊட்டியவள் ஒரு தமிழ் பெண்மணி என்பதை எமது சகோதரிகள் நன்கு அறிய வேண்டும். ஆகவே எமது தாய்க்குலம் தமிழ் மக்களின் விடுதலைக்கு உழைக்க முன்வரவேண்டும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

இன்று தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காக உழைக்க அனைவரும் முன்வரின் உரிமைகளை விரைவில் பெற்றுக் கொள்ளலாம். பேச்சளவில் மட்டும் இல்லாமல் செயலளவில் உள்ளவர்கள் தான் எமக்கு இன்று தேவை.

தமிழ் மக்கள் அற்ப சலுகைக்காக வாழாது தமது உரிமைக்காக வாழவேண்டும்.

சாவகச்சேரி எம். பி திரு. வி என். நவரத்தினம் பேசுகையில் எந்த இனமும் தனது கலை, கலாச்சாரம் போன்றவற்றை காப்பாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் பேசுகையில், தமது கட்சி தமிழ் பேசும் இனத்தின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு சத்தியாக்கிரக வழியே சிறந்தது எனத் தீர்மானித்து செயல்படுத்தி வருகின்றதென்றும் மொழியுரிமையைப் பெறுவதற்குப் தீண்டாமையை ஒழிப்பதற்கும் தமது கட்சி அதிகம் உழைத்து வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

திரு. வி. நடராசா பேசுகையில் கூறியதாவது:

எல்லாம் தமிழ் இயக்கத்தின் காரணமாக சிங்கள மக்கள் சிங்களம் மாத்திரம் என இயக்கத்தை நடத்த முயல்வார்களானல் நிச்சயம் நாம்கேட்கும் சமஷ்டி அரசியலிலும் பார்க்க தனித் தமிழ் நாடு கிடைக்க வழி வகுத்தவர்களாவார்கள். தனித் தமிழ் இயக்கத்தின் காரணத்தால் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழை கட்டாயமாக படிக்க வேண்டிய சூழலுக்கு ஆளாகின்றார்கள். ஆகவே தமிழ் இயக்கம் வளரப் பாடுபட வேண்டும்.

மற்றும் பலர்பேசினர்.

## ஜாடோட்வில்லி கலகம்

### 36 பேர் மாண்டனர்

லியப்போல்ட்வில்லி, ஏப். 17

ஜாடோட்வில்லியில் சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமான கலகத்தில் இதுவரை 36 பேர் மாண்டனர். இப்பொழுது அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டுவிட்டதாக காங்கோ மத்திய அரசாங்கம் தெரிவித்தது.

ஜாடோட்வில்லியில்ஏற்பட்ட கலகம்பற்றி விசாரணை செய்வதற்கு காங்கோ மத்திய அரசாங்கத்தின் விசேஷ தூதுக் கோஷ்டியொன்று அங்கு சென்றுள்ளது.

ஜாடோட்வில்லிக் கலகத்தை அடக்குவதற்காக அங்கு விரைந்து சென்ற ஐ. நா. படையைச் சேர்ந்த இந்தோனேஷியத் துருப்புக்களுக்கு உதவியாக இப்பொழுது எதியோப்பியத் துருப்புக்களும் அனுப்பப்பட்டுள்ளன.

காங்கோலிய துருப்புக்கள் கோஷ்டியொன்றும ஜாடோட்வில்லிக்குச் செல்லவிருக்கின்றது.

## பட்டினி இயக்கத்துக்கு பட்டினி

லண்டன், ஏப். 14

லண்டனில் பின்ச்லே என்னுமிடத்தில் உள்ள ஒரு பள்ளியைச் சேர்ந்த 100 ககும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த வாரம் பூராவிலும் பகல் உணவு சாப்பிடவில்லை. இவ்வாறு பட்டினி கிடந்ததன் மூலம் சேர்ந்த பணத்தை இந்த மாணவர்கள் உலகெங்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பசிப்பிணி ஒழிப்பு இயக்கத்துக்கு அளித்துள்ளனர்.

## ஐயாறன்

ஏடுகளிலிருந்து

புதுவருடப் பிறப்பன்று ஓர் அன்பர் டெலிபோனில் பேசினர். தமிழ் மொழி உரிமையைப் பாதுகாக்க வேண்டியதைப்பற்றி ஆங்கிலத்திலே உணர்ச்சியுடன் கூறி அதுபற்றி தாம் ஒரு கட்டுரை எழுதி அனுப்புவதாயும் அதைத் தமிழில் மொழிபெயர்த்துப் போடும்படியும் கேட்டுக்கொண்டார்.

ஐயா தயவுசெய்து தமிழிலேயே எழுதி அனுப்புங்கள்' என்று கேட்டேன். தமிழில் எழுதத் தெரியாதென்றார். அவர் தமிழ்ப் பத்திரிகைகளையும் படிப்பதில்லையாம்! ஆங்கிலப் பத்திரிகைகளைத்தான் வழமையாகப் படிப்பதாம்!

'எல்லாம் தமிழ் இயக்க' வாரத்திலே ஆங்கிலத்தின் மூலம் தமிழ் மொழியை வளர்க்க முன்வந்த அந்தத் தலைவருக்கு புதுவருட வாழ்த்துக்கள் கூறி பேச்சை முடித்தேன்.

* * *

சந்தா முடிந்த ஓர் அன்பருக்கு ஞாபகப்படுத்தி ஒரு கடிதம் தமிழில் எழுதி விலாசத்தை ஆங்கிலத்தில் வழமைபோல் 'டைப்'அடித்து அனுப்பி இருந்தோம். அவர் எழுதியுள்ள பதிலில் சந்தாவை மகிழ்ச்சியுடன் புதுப்பித்துவிட்டு "இனிமேல் தமிழிலேயே முகவரியை எழுதுங்கள். இல்லாவிட்டால்பத்திரிகையை அனுப்பவேண்டாம்" என்று எழுதியிருந்தார். சபாஷ்! அப்படியே திருத்திக்கொண்டுவிட்டோம். ஆங்கிலம் படித்த தமிழர்கள், தமிழ் உரிமைக்காகப் போராடுவதாகக் கூறினும், தங்களுக்குள்ளாகவே ஆங்கிலத்தில்தான் வெகுவாகப் பேசிக்கொள்ளுவதைப் பார்க்கிறோம். நெடுநாளைய வழக்கம். அதில் தவறு இருக்கின்றதென்ற உணர்ச்சிகூட நம்மில் பலருக்குமில்லை.

'எல்லாம் தமிழ் இயக்க'த்தின் பயனக, இதைப்பற்றி சிந்திக்கவும், தவறைத் திருத்திக்கொள்ளவும், நம்மில் பலருக்கும் இதனை நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளதல்லவா?

*

மொழிக்கு மொழி விரோதமெதுவுமில்லை. ஒருவருக்கு எவ்வளவு மொழிகள் தெரிகின்றதோ அவ்வளவும் நல்லது. வினேபா பாவேக்கு 20 மொழிகளுக்கு மேல் தெரியுமாம். அவர் இப்போது சீன மொழி கற்றுக்கொண்டு வருகிறாராம்! வயது 60 க்கு மேலாகிவிட்டது.

ஆகவே எல்லாம் தமிழியக்கம் காரணமாக, நமக்கு எந்த மொழியின் மீதும் துவேஷமோ வெறுப்போ ஏற்பட்டுவிடக்கூடாது. ஆனல் தமிழ்மொழி உரிமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள இச்சமயத்தில், தமிழரே தமிழில் பேசாமல், தங்கள் அலுவல்களைத் தங்களுக்குள்ளாகவும் கூடத் தமிழிலேயே நடத்தாமல் தமிழைப்புறக்கணிப்பதாயின், தமிழ் எப்படி பாதுகாக்கப்படமுடியும்? தமிழரே தமிழ் பத்திரிகைகளை ஆதரிக்காவிடில் தமிழ்ப் பத்திரிகைகள் எப்படி வளர்ச்சி அடைய முடியும்?

* * *

இம்முறை புதுவருடப்பிறப்பு யாழ்ப்பாணமெங்கும் மிகஅமைதியாகவும், புனிதமாகவும் கொண்டாடப்பட்டதாம். கொலைக்குற்றங்கள் பற்றி புகார் எதுவுமில்லை என்றும் போலீசில் விசாரித்ததில் தெரிகின்றது. பலே! பேஷ்! புதுவருஷ மனைத்தும் இப்படியே இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்?

* * *

புழுவாய்ப் பிறக்கினும்
புண்ணியா உன்னடி
என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர
வேண்டும் இவ்
வையகத்தே

(5ம் பக்கம் பார்க்க)

# "சுதந்திரம் கேட்போர் சுதந்திரம் வழங்கவும் வேண்டும்"

## கோப்பாய் கூட்டத்தில் பேச்சு

மாவிட்டபுரம், திங்கள்

'சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள் சுதந்திரத்தை தங்களுக்குள்ளே காணவேண்டும். சமத்துவம் கோருபவர்கள் தமக்குள்ளே சமத்துவம்காண வேண்டும். பண்டைத் தமிழ்ச் சமுதாயத்திலே இன்று காணும் சாதி வேற்றுமைகள் இல்லை. பழைய இலக்கியங்களிலே இதற்கான சான்றுகள் காணப்படுகின்றன' என்று அட்வகேட் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை புத்தூர் குமரகுருபரன் சனசமூக நிலையத்திற்கருகில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் எல்லாம் தமிழ் இயக்கப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கதிரவேற்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சாதி என்ற சொல் வடமொழியிலிருந்து வந்தது. வடமொழி நாகரிகத்திலிருந்து வந்த ஒரு கருத்தை குறிக்க உபயோகிக்கப்பட்டது. வடமொழியில் நாலு சாதிகள், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று கூறப்படுகின்றன. இவற்றுக்கு நேரான தமிழ் சொற்கள் இல்லை. ஏனெனில் தமிழ்ச் சமுதாயம் மக்களை நான்கு சாதிகளாகப் பிரிக்கவில்லை. இடையிலே நாம் பூசிக்கொண்ட சாதி வேறுபாடு என்னும் அழுக்கை இடையிலேயே நீக்கி முன்னேறவேண்டும்.

சுய மரியாதை, சுதந்திரம், தன்மானம் என்பனவற்றுக்காகப் போராடும் நாம் மற்றவர்களுடைய சுயமரியாதை, சுதந்திரம் ஆகியவற்றினை வழங்கிப் பின்னரே போராடவேண்டும். இல்லையெனில் நாம் சுதந்திரம்பெறத் தகுதியற்றவர்கள். புதிய சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கவல்லமையற்றவர்கள். சைவத்திலோ, மற்றும் எந்தச் சமயத்திலோ சன்மார்க்கத்திலோ நாம் வளர்ந்து முன்னேற வேண்டுமாயின் சாதி வேறுபாட்டை உடனடியாக நீக்கவேண்டும்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது:-

மற்றவர்களைப்போல் தமிழரசுக் கட்சியும் நித்திரையாய் இருந்திருந்தால் இன்று எல்லாம் சிங்களச் சட்டம் முழுக்க முழுக்க நிறைவேறி சிங்கள எதிர்ப்பு இயக்கம் என்று ஒரு இயக்கம் இல்லாமல் போய் இருக்கும். தமிழ் சமுகமும் ஓரளவிலேனும் சிங்களச் சமுகமாக மாறி இருக்கும்.

தமிழரசுக்கட்சி தமிழர்களுக்காக இதுவரை என்ன செய்துள்ளது என்று சிலர் கேட்கிறார்கள். தமிழரசுக்கட்சிதான் வடக்கு, கிழக்கு என்று பிரிந்திருந்த தமிழ்பேசும் மக்களை ஒற்றுமைபடுத்த சில சுயநல தலைவர்களின் சுரண்டலில் இருந்து காப்பாற்றியது மேலும உடுப்பிட்டி எம். பி. பின் உதவியுடன் எமதுகட்சி சிங்களத் திணிப்பை ஓரளவு தணித்திருக்கிறது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

மீண்டும் நேரடி நடவடிக்கை என்றவுடன் கடந்த காலத்தில் இராணுவத்தினால் இழைக்கப்பட்ட இன்னல்களை நினைந்து பீதி சொல்லுகின்றனர் ஒருசிலர். இப்பயத்தைப் பயன்படுத்தி தமிழ்ப்பேசும் மக்களுடைய உறுதியைக் குலைத்து அடிமைப்பாதையில் அழைத்துச் செல்ல சக்திகள் முனைந்து நிற்கின்றன. ஆனால் விடுதலைக்காக மற்ற இனங்கள் செய்த தியாகங்களோடு ஒப்பிடும்போது நாம் செய்தது சிறிதளவுதான். எனவே கோழைகள் என்று வருங்காலச் சரித்திரம் வசைகூற இடம் கொடாது எமது இனத்தின் ஈடேற்றத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாரரக வேண்டும்.

திரு. பிரான்சிஸ் பெரேரா பேசுகையில் கூறியதாவது: இன்று இலங்கையில் பெரும்பான்மை மக்களிடையே மூன்று பெரும்பான்மைக் கட்சிகள் உள்ளன. அவை மூன்று பிரிவுச் சிறுபான்மை மக்களை அணைத்துக் கொண்டு சிறுபான்மையினத்தையே அழிக்கச் சூழ்ச்சி செய்கிறார்கள் என்றார்

வழக்கறிஞர் திரு, எஸ், நடராசா பேசுகையில் கடந்த கால சம்பவங்களைக் கொண்டு ஆரம்பத்தில் எதிர்த்துப் பின்னர் சரணடைவர் என்ற எண்ணத்தைக கொண்டிருந்த சிங்கள அரசாங்கத்திற்கு அந்த எண்ணம் பிழையானது என்பதனைக் காட்டிய ஒரே ஒரு கட்சி தமிழரசுக்கட்சிதானென்றும் தமிழரசுக் கட்சி இதனைத் தொடர்ந்து காப்பாற்றியே தீரும் என்றும் தமிழரசுக்கட்சியின் நேரடி இயக்கம் அரசாங்கத்திற்கே திகிலை ஏற்படுத்தியுள்ளதென்றும் கூறினார்.

பண்டிதர் க. பொ. இரத்தினம் உட்பட மற்றும்பலர் பேசினர்.

## இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலயங்களின் சமாசச் செயலாளர் திரு. த. துரைசிங்கத்தை கல்வி இலாகா இடமாற்றம் செய்யவிருப்பது குறித்துப் பிரஸ்தாப சமாசம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. சமாசத்தின் தற்போதைய முயற்சிக்காக இவ்விடமாற்றம் பெரிதும் பாதிக்குமாகையால் அவரது இடமாற்றத்தை ஒத்திவைக்க வேண்டுமெனவும் பிரஸ்தாப சமாசம் கோரியுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்ற சமாச செயற்குழுக் கூட்டத்தில் இது பற்றி ஆலோசிக்கப்பட்டது. சமாசத்தலைவர் இராசவாசல் முதலியார் சி. தியாகராசா இக் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். திரு. ச. இராசையா பேசுகையில், சமாசச் செயலாளர் சமாசத்தின் வளர்ச்சிக்காக அரும் பணியாற்றியுள்ளாரென்றும் சமாசவிழாக்களும், மற்றும் பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கும இவ்வேளையில் அவரது இடமாற்ற உத்தரவு கிடைத்திருப்பது கவலைக்குரியதென்றும், சமாசத்தின் வளர்ச்சியை இது பெரிதும் பாதிக்குமென்றும் கூறினார். திருமதி வேதவல்லி கந்தையா, பண்டிதர் வீ. வ. நல்லதம்பி, திருவாளர்கள் இரா. சண்முகரத்தினம், இ. வே. செல்வரத்தினம், ச. நடராசா, சி. சண்முகலிங்கம் ஆகியோருட்படப் பலர் இது பற்றிப்பேசினர். இடமாற்றத்தை ஒத்திவைக்க வேண்டுமெனக் கல்வி இலாகாவைக் கோரும் ஓர் பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேறிற்று.

## 908 சீனர்கள் சீனு திரும்பினர்

சென்னை, ஏப். 15

சீனர்கள் இந்தியாவுக்கு அனுப்பிய இரண்டு கப்பல்களும் நேற்று சென்னையிலிருந்து 908 சீனப்பிரஜைகளுடன் தாயகத்துக்குப் புறப்பட்டுச்சென்றன.

இந்தியாவிலுள்ள சீனப் பிரஜைகளில் சீனுவுக்குத் திரும்பிச் செல்ல விரும்பியவர்கள் எல்லோரும் அநேகமாகத் திரும்பிச்சென்று விட்டன.

## செய்திச் சுருக்கம்

### எச்சரிக்கை!

கொழும்பு, திங்கள்

மருதானைக்கும் கோட்டைக் குமிடையேயுள்ள புகையிரத பாதையினுல் நடந்து செல்பவர்கள் அடுத்த மாதத்திலிருந்து எச்சரிக்கையாகவிருக்க வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர். அடுத்த மாதம் முதல், வர்ணவிளக்குகளின் உதவியுடன் புகையிரதங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதால், எந்தச் சமயத்தில், எந்தப்பக்கத்தில் இருந்து புகையிரதம் வருகிறது என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமென்றும் பொதுமக்கள் எச்சரிக்கையாகவிருக்க வேண்டுமென்றும் புகையிரதப்பகுதி அறிவித்துள்ளது.

### மாணவர் மரணம்

பண்டாரவளை, திங்கள்

தர்மதாசா என்ற 18 வயதுள்ள மாணவன், மின்னல் தாக்கி மரணமானர். இந்தச் சம்பவம் ஹப்புத்தளையில் நடைபெற்றது.

### புத்தளத்தில் புயல்

புத்தளம், திங்கள்

புத்தளத்தில் அண்மையில் ஏற்பட்ட கடும் புயல் காரணமாகாக ஏராளமான தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன.

### அப்போதிக்கரி இல்லை

தெரணியாகலை, திங்கள்

எட்டியாந்தோட்டையிலுள்ள பனப்பிட்டியா அரசினர் ஆஸ்பத்திரி கடந்த சில வாரங்களாக மூடிக்கிடக்கிறது. வாரத்தில் இரண்டு முறை இந்த ஆஸ்பத்திரிக்கு வரும் அப்போதிக்கரி கடந்த பல வாரங்களாக வரவில்லை. இதனல் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### ஸ்தலத்திலேயே மரணம்

வத்துகாமம், திங்கள்

வத்துகாமம் என்ற இடத்தில் ஒரு மோட்டார் வாகனம் ஒரு பெண் மீது மோதியதால், என். பொடி நோனு என்ற அந்தப் பெண் ஸ்தலத்திலேயே மரணமானர். சம்பந்தப்பட்ட மோட்டார் வாகனத்தை பொலிஸார் தேடுகின்றனர்.

### மனிதப்பண்புள்ள . . :

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தார். பண்டிதர் இ. திருநாவுக்கரசு, முதலியார் செல்லையா ஆகியோரும் பேசினர். கூட்ட ஆரம்பத்தில் பேச்சாளர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். செல்வி பரமேஸ்வரி வைத்திலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி ஒன்றும் நடைபெற்றது.

### ஐயாறன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழுவார்க்கிரங்கி
இருந்தருள் செய்
பாதிரிப் புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை
செஞ்சடைமேல் வைத்த
தீ வண்ணனே.

— திருநாவுக்கரசர்

# 'சட்டத்தை மாற்றினுல்மட்டும் பிரச்னைகளை தீர்த்துவிட முடியாது'

## பெற்றர் தினவிழாவில் பேச்சு

மாவிட்டபுரம், திங்கள்

"எங்கள் பகுதியில் மட்டுமோ அல்லது எங்கள் நாட்டில் மட்டுமோ வேலையில்லாத் திண்டாட்டம் நிலவிவரவில்லை. ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் வேலையில்லாத திண்டாட்டம் நிலவிவருகின்றது. எனவே எங்கள் கஷ்டங்களுக்கு எந்தவித அரசியல் பிரச்னைகளோ அல்லது மொழிப்பிரச்னையோ காரணங்களல்ல. சட்டத்தை மாற்றினுல் மட்டும் எங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாது. எங்களுக்குள்ள கஷ்டங்களின் தன்மையைப் பற்றி விளக்கிக்கொள்வதன் மூலமே எமது பிரச்னைகளை நாம் தீர்த்துக்கொள்ள முடியும்."

இவ்வாறு இணுவில் சைவப் பிரகாசவித்தியாசாலை பெற்றார் தின விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் வட பகுதி உதவி வித்தியாதிபதி திரு. உ. சோமசேகரம் குறிப்பிட்டார்.

அவர் தமது தலைமையுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சனத்தொகை அதிகரித்து வருகின்றது; அதே நேரத்தில் எமது தேவையை சமாளிக்கமுடியாமல் நாம் இருக்கின்றோம். தேவையில்லாத பிரச்னைகளுக்காக நாம் போராடி வருகின்றோம்; இதனுல் எவருமே எமது பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலையையும் ஏற்படுத்தி வருகிறோம். எது முக்கியமான பிரச்னை, எதை முதலில் தீர்த்துக்கொள்ள வேண்டுமெனபது பற்றி நம்மிடையே தெளிவான விளக்கம் கிடையாது.

எஸ். எஸ். சி. சித்தியடைந்துவிட்டும், பட்டதாரிகளாகியும் அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்திருப்பவர்களை விட எஸ் எஸ்.சி. சித்தியடையாம விருப்பவர்கள் பொருளாதார பிரச்னைகளைத் தீர்ப்பதில் பெரிதும் உதவி வருகிறார்கள். எங்கள் இளைஞர்கள் பாடசாலைகளிலிருந்து விரைவிலேயே வெளியேறி, பண்ணைகளிலும், விவசாயத்திலும் மற்றும் கைத்தொழில்களிலும் ஈடுபட்டால் எங்கள் நாட்டில் செல்வம்கொழிக்கச் செய்யலாம்.

வித்தியாசாலை தலைமை ஆசிரியர் திரு இ. நல்லதம்பி தமது வருடாந்த அறிக்கையைச் சமர்பபித்துப் பேசினர்.

வித்தியாதரிசி திரு. ச. விசுவலிங்கம் பேசுகையில், மாணவர்கள் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் என்ற ரீதியில் தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தத்தமக்கேற்ற கல்வியைப்பெற்று வாழ்க்கையை வளமுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# "கிராமப்புற பாடசாலைகள் திருத்தவேலைகள்

## 180 லட்சரூபாய் செலவழிக்கப்படும்"

—கல்விமந்திரி

பண்டாரவளை, திங்கள்

'ஆசியாவில், இலங்கையில்தான கல்விக்கு அதிகமான பணம் செலவழிக்கப்படுகிறது' என்று கதுறுகமுவ வித்தியாலயத் திறப்புவிழாவில் கல்வி மந்திரி திரு. பதியுதீன் மஹமூத பேசுகையில் கூறினர்

மந்திரி தொடர்ந்து பேசுகையில், குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதிகளை அளிக்கும் பொருட்டே பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றது என்று கூறினர்.

மந்திரி தொடர்ந்து கூறியதாவது: வசதி குறைந்த குழந்தைகள் நல்ல கல்வியைப் பெறுவதற்கு தேசிய கல்வி முறை வகைசெய்கிறது. 1956-ம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சி புரிந்த அரசாங்கம் நாட்டுக்கேற்ற கல்வி முறையை அளிக்கத் தவறிவிட்டது.

பாடசாலைக் கட்டிடங்களுக்காக, கடந்த வருடம் அரசாங்கம் 250 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தது. இந்தப் பணத்தில் கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளுக்காக 220 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டது. பாடசாலைக் கட்டிடங்களைத் திருத்துவதற்காக அரசாங்கம் இந்த வருடத்தில் 200 லட்சம் ரூபாய்க்கு வாக்களித்துள்ளது. இந்தத் தொகையில், கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளைத் திருத்துவதற்காக குறைந்தது 180 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும். புதிய கல்வி முறையினுல், கல்வித்தரம் உயரும் எனறே நான் நம்புகின்றேன்."

ஜாகர்த்தா, ஏப். 15

மக்கள் சீனக் குடியரசின் அதிபர் லீ ஷா சியும் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணேவும் நேற்று பாண்டுங் போய்ச் சேர்ந்தனர். இவர்கள் இங்கு ஐந்து தினங்கள் தங்கியிருப்பர்.

## சயிக்கிள் ஓட்டப்போட்டி

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறைப் பொலிஸ பகுதியினரால் புத்தாண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட 50 மைல் சயிக்கிள் ஓட்டப்போட்டியுல் கரணவாயைச் சேர்ந்த எம். கணேச என்பவர் 50 மைல் தூரத்தையும் இரண்டுமணி 11 நிமிடத்தில் ஓடி முடித்து முதலாவது இடத்தைப் பெற்றார்.

பருத்தித்துறை லங்கா பெட்றோல் நிலயத்தில் இருந்து ஆரம்பமான இப்போட்டியில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 75 வீரர்கள் கலந்து கொண்டனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. டி. ஆறுமுகத்தினல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்போட்டியில் புலோலி தெற்கைச் சேர்ந்த வி. இராமநாதன் இரண்டாம் இடத்தையும் கே. சிவலிங்கம், கே. சிவராசா, எம். இராசா ஆகியோர் 3-ம், 4-ம், 5-ம் இடங்களையும் பெற்றனர்.

## நேபாளத்தில் அவசரகாலம் ரத்து

காட்மாண்டு, ஏப். 15

நேபாளத்தின் புதுவருட தினமான நேற்று உயர்பீட சட்டசபையான பஞசாயத்து சபையின் முதல் கூட்டத்தை நேபாள மன்னர் மகேந்திரர் ஆரம்பித்து வைத்தார்.

நேபாளத்தின் அரசியல் சாஸனத்தை நிறுத்திவைத்து ஆட்சிப் பொறுப்பை சில வருடங்களுக்கு முன்னர் மன்னர் மகேந்திரர் ஏற்றபொழுது பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச சட்டமும் நேற்று ரத்துச் செய்யப்பட்டது.



# மாணவர் மலர்



## பறக்கும் பாம்பு

—மகான்—

(12)

முருகுவுக்கும் ஷகானுக்குமிடையே நடைபெற்ற கதைபேச்சுக்கள் சிறிது நேரத்தின் பின்னர் முடிவடைந்தது. ஷகானின் வீட்டின் முன் அறையில் தங்கியிருக்கும் முருகு, தனது அறைக்குள் நுழைந்துவிட்டார். ஷகானின் மூளையில் ஏதோ சிக்கியது. அது?

வேலைக்குப் போகவில்லையா என்று ஷகான் கேட்டதற்கு; "இரவு ஒன்பது மணிக்குப் போய் ஒரு மணிக்குத்தான் வீட்டுக்கு வருவேன்..." என்று முருகு சொன்னது...சி. ஐ. டி. ஷகானின் தலையில் சுத்தியலால் யாரோ அடிப்பதுபோன்ற ஒருவித உணர்ச்சியை அவருக்கு ஏற்படுத்தியது!

"இரவு ஒன்பது மணிக்கு போய் ஒரு மணிக்குத் திரும்புவேன்" என்று முருகு கூறிய வார்த்தைகள், சி. ஐ. டி. ஷகானுக்கு திடீரென சந்தேகத்தை தூண்டிவிட்டதென்ருலும், அடுதத கணமே ஷகான் அதை மறந்துவிட்டார்.

திடீரென சந்தேகம் கொள்வதால் எப்படியான கட்டங்கள் உருவாகுமென்பதும், திடீரென ஏற்படும் சந்தேகம் சில வேளைகளில் தோல்வியில் முடிவடையுமென்பதும் சி. ஐ. டி. ஷகான் அறியாததல்ல. முன்பு ஒரு தடவை... சுமார் ஐந்து வருட காலங்களுக்கு முன்னர்; ஷகான் துப்பறியும் தொழிழில் பிரவேசித்தபொழுது முதற் தடவையாக, ஷகானிடம் வந்த இரட்டைக் கொலை வழக்கில் அவர் அனுபவமில்லாததால் முதலில் சந்தேகம் கொண்டு பின்னர் அதில் தோல்வி கண்டதையும் அது தமக்கு ஏற்பட்ட முதலனுபவம் என்பதையும் ஷகான் மறந்துவிடவில்லை. அவரால் மறக்கவும் முடியாது! ஐந்து வருடங்களுக்கு முன்னர் தனக்கு ஏற்பட்ட அந்த முதல் அனுபவத்தைத்தான் இப்பொழுது அவர் யோசித்தார்!

"முருகு நல்லவன்; எனக்கு உதவி செய்திருக்கின்ருன். அவனைச் சந்தேகப்படுவதே தவறு. சே... மனம் ஒரு குரங்கு என்று அர்த்தமில்லாமலா சொன்னுர்கள்...? பறக்கும் பாம்பு மர்மம் சம்பந்தமாக முருகு ஏன் வாதாடவேண்டும்? பறக்கும் பாம்புக்கும் முருகுவுக்கும் என்ன தொடர்பிருக்கிறது? எனக்கு ஆபத்து ஏற்படலாம் என்று முருகு கருதினுலும் பறக்கும் பாம்பு மர்மத்தில் அவர் அப்படி வாதாடத் தேவையில்லையே...! இரவு ஒன்பது மணிக்குச் சென்று ஒரு மணிக்கு வீடு திரும்புவதாக முருகு சொல்கிருரே... அதுவரைக்கும் அவர் என்ன வேலை செய்வார்...? கொழும்பு, கண்டி என்ருல் பரவாயில்லை, இரவிலும் வேலை இருக்கும். மட்டக்களப்பில் எனக்கும் தெரியாமல் அப்படிஎன்ன வேலை இருக்கிறது...?"

சி. ஐ. டி. ஷகானின் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றின. தனது இதயத் தராசில், முருகுவை ஒரு பக்கத்தில்வைத்து மறுபககத்தில் தனது மனச்சாட்சியை—கடந்த கால அனுபவங்களை வைத்து 'நிறுத்து'ப் பார்த்தார். செகண்டுகள் நிமிடங்களாகின. நிமிடங்கள் ஒவ்வொன்ருக மறைந்துகொண்டிருந்தன. ஷகானின் மனச்சாட்சி...?

அவரின் மனச்சாட்சி முருகுவை மன்னித்தது. முருகு மாசற்றவர் என்று அவரின் இதயம் கூறியது. சில நிமிடங்களாக ஷகானின் இதயத்தில் ஏற்பட்ட இதயக் குமுறல் ஒடுங்கி, அடங்கி, பதுங்கி வந்த இடம் தெரியாமலேயே மறைந்துவிட்டது. ஷகானின் இதயம் தெளிவாகவிருந்தது. விரிந்து அகன்று இருக்கும் தாமரை இலை போன்ற ஷகானின் இதயத்தில் எந்தவிதமான "நீர்த்துளிகளும்" இருக்கவில்லை!

∴ ∴ ∴

நேரம் சென்றுகொண்டிருந்தது. மட்டக்களப்பு நகர மத்தியில் கம்பீரமாக வீற்றிருக்கும் மாதா கோவிலில் இருந்து டாங்.. டாங்... என்று எட்டுத் தடவைகள் மணி ஒலித்தன. இரவு எட்டு மணி! வீதியில் ஜனநடமாட்டம் மிகவும் குறைந்திருந்தது. வழக்கமாக, மட்டக்களப்பு கோட்டைமுனைப்பாலத்தின் கீழே மீன்பிடிப்பவர்கள் கூட இன்று காணப்படவில்லை. ஒருவேளை அவர்கள் நேரத்துடன் போய்விட்டார்களோ தெரியவில்லை. பறக்கும் பாம்பு பயம் எல்லோர் மனதிலும் குடிகொண்டிருந்தது. மனதிற்கு இனிய தென்றலை, மனஆறுதலைக் கொடுக்கும் மாலை நேரத்தை விரும்பாத மட்டக்களப்பு நகர மக்களின் மனதில் 'இன்று யார் இறப்பார்கள்? பறக்கும் பாம்புக்கு யார்பலியாவார்கள்? எங்கு இந்தக் கொலை நடைபெறும்?" என்ற கேள்விகள் தான் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. பாம்பல்லவா...? பாம்பென்ருல் படையும் நடுங்குமே...!.

∴ ∴ ∴

இன்று வெள்ளிக்கிழமை. வெள்ளிக்கிழமை என்ருலே ஒருவித பயம்தான். இதனுடன் நாகபாம்பு-பறக்கும் விஷநாகம் நடமாடித் திரிவதென்ருல்... மக்களின் மனப்பயத்தை வார்த்தை அலங்காரங்களினுல்கூட வர்ணிக்க துயரைவெளியிட முடியாது! இன்று வெளிவந்த தினசரிப் பத்திரிகைகளிலெல்லாம் பறக்கும பாம்பு விஷயம் தான். பத்திரிகைகளின் முதற் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் பறக்கும்பாம்பு விஷயம் பிரசுரிக்கப்படடிருந்தது. பத்திரிகைகளில் வெளிவந்ததைப் படிப்பதெற்கே பயங்கரமாகவிருந்தது.

∴ ∴ ∴

இரவு ஒன்பது மணி. சி. ஐ. டி ஷகானின் வீடு. ஷகான் முன்ஹோலுக்குள் எதையோ படித்துக்கொண்டிருந்தார். இரவுச் சாப்பாடும் முடிந்துவிட்டது. ஷகானின் நண்பர் முருகு, அவரது அறையிலிருந்து வெளியே புறப்பட்டார். முருகு புறப்படுவதை ஷகான் கவனித்தபோதிலும் ஷகானிடம். முருகு எதையும் சொல்லாமாலே புறப்பட்டுவிட்டார்.

முருகு எங்கே செல்கிருர்? வேலைக்குப்போகலாம்! என்ன வேலை? எங்கு வேலை? எப்படியான வேலை? எல்லாம் முருகுவுக்குத்தான் தெரியும்!.

(தொடரும்)

## மூளைக்கு வேலை

கடந்த வாரம் நான் கேட்ட கேள்விக்கு அநேகர் விடையெழுதி யிருந்தார்கள். ஆனல் குறிப்பிட்ட சிலர் மட்டுமே சரியான விடையெழுதியிருந்தாகள். சென்ற வாரம் கேட்கப்பட்ட கேள்வியின் சரியானவிடை "இந்தியப் பிரதமர் நேரு" சரியான விடையனுப்பியவர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

நா. சத்தியானந்தன், பொன்னலை; தேவயானி பாலசுப்பிரமணியம், திருநெல்வேலி; இ சுந்தரலிங்கம், தையிட்டி; எஸ். சண்முகநாதன், காங்கேசன்துறை; சி. தவமணி, உடுப்பிட்டி; மா. சுவாமிநாதன், கொல்லன்கலட்டி; த. பாலசுந்தரம், இளவாலை; இ மதிவதனி, பொன்னலை; பா. சிவபாலன், திருநெல்வேலி; எ. ஜெகநாதன், சுழிபுரம்; ப. நடேசன், கைதடி; மு. சிவபாலன், நீராவியடி; க. சிவகாருண்யம், ஊர்காவற்றுறை: கு. குலேந்திரன், மல்லாகம்; வி. குகாதரன், கஸ்கிஸன் வீதி, திருமலை; சி. தெய்வேந்திரகுமார், நீராவியடி; மீனலோஜினி செல்வராஜா (எட்டு வயது) 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்; என். கோடீஸ்வரன், நீராவியடி; வை. சச்சிதானந்தசர்மா, காரைநகர்; பா. கணேசன், யாழ்ப்பாணம்; அ. சண்முகலிங்கம், பெரியதெரு, திருமலை; அ. சிவலிங்கம், கந்தர்மடம்; பெ, குணரத்தினம், திருக்கோணமலை; வ. சரத்சந்திரா, வதிரி; சி. தங்கவேல், உடுப்பிட்டி; ஆர். பாலாஜி, சாவகச்சேரி.

### இவ்வாரக் கேள்வி

கணக்குக் கேள்வி வேண்டும் என்று பலர் எனக்கு கடிதம் எழுதியதால் இம்முறை ஒரு கணக்குக் கேள்வி.

அப்பொழுது பாடசாலையில் நான் படித்துக் கொண்டிருந்தேன். தேகப்பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேகப்பயிற்சி ஆசிரியர் எங்களில் பத்துப் பேரை தேர்ந்தெடுத்து; ஒரு வரிசையில் நாலு (4) பேர் வீதம் ஐந்து (5) வரிசையில் நிற்கும்படி உத்தரவிட்டார். ஒரு வரிசையில் நாலுபேர் வீதம் ஐந்து வரிசையில் பத்துப்பேர் எப்படி நிற்பது? நாங்கள் 10 பேரும் விழித்தோம். ஆனல் சிறிது நேரத்துக்குப் பின்னர் ஆசிரியரின் உத்தரவுப்படி நின்ருேம். நாங்கள் என்ன மாதிரி நின்ருேம் என்பதை உங்களால் கூற முடியுமா? படம் வரைந்து விளக்கினல் நல்லது. நீங்கள் விரும்பினல், நாங்கள் எப்படி, என்னமாதிரியான வரிசைகளில் நின்ருேம் என்பதை படம் மூலம் வரைந்து விளக்கலாம். சரியான விடையை மாணவர்மலர், ஈழநாடு, த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள். மீண்டும் அடுத்த வாரம் சந்திக்கிறேன்.

—சாந்தா

## மனிதன் மாறிவிட்டான்

—பி. ரி. தவராசா, கற்கைநகர்—

விஞ்ஞான வளர்ச்சியால் நாகரிகம் வளர்ந்திருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது. மனிதவர்க்கத்திற்கு இன்றியமையாத எத்தனையோ சௌகரியங்கள் விஞ்ஞானம் செய்து கொடுத்திருந்தாலும் அவர்களின் நலனைப் பாதிக்கக் கூடிய எத்தனையோ சக்திகளைத் தூண்டிவிட்டிருப்பதும் விஞ்ஞானம் தான் என்பதில் ஐயமில்லை.

விஞ்ஞானம் கைகொடுத் தூக்கிய முதல் துறை கல்வித் துறையெனலாம். இன்று பணக்காரர் என்று பேதமின்றி எந்த மக்களும் கல்வி கற்க வசதியிருக்கிறது. நாம் எல்லோரும் பண்டைக்காலத்துத் திண்ணைப் பள்ளிக்கூடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருேம். பாடசாலை வசதிகளும் போதிய புத்தகங்களும இல்லாமலே மக்கள் கல்வி கற்கவேண்டிய நிலைமை இருந்தது. இன்று மக்களுக்குக் கல்வி போதிப்பதிலேயே எத்தனையோ புதுமுறைகள் கையாளப்படுகின்றன. செவிடர், குருடர், ஊமைகள் ஆகியோரும் இப்பொழுது கல்வியின் பயனை அடையமுடிகிறது என்ருல் விஞ்ஞானம் சாதித்துள்ள மகத்தான வெற்றியைக் கூறவும் வேண்டுமோ?

ஆதிகாலத்தில் மனிதன் பறவைகளைப்போல் பறக்கவும் மீன்களைப்போல் தண்ணீரில் நீந்தவும் வேண்டும் என்று ஆசைப்பட்டான். அவனுடைய ஆசை நிராசையாகப் போகாமல இருபபதற்கு உதவியது விஞ்ஞானம்தான் என்பது வெள்ளிடைமலை. இன்று ஆகாயவிமானங்கள் விண்ணை அளாவுகின்றன, நீராவிக்கப்பல்கள் புறப்பட்டு உலகத்தையே சுற்றிப் பவனிவருகின்றன.

வரண்ட பாலைவனங்களெல்லாம் பூத்துக்குலுங்கும் சோலைவனங்களாக காட்சியளிப்பது எதனுல்? வற்ருது வளைந்தோடும் ஜீவநதிகளையெல்லாம் அணைகட்டி மக்களுக்கு பயன்படும்படி செய்வதும் விஞ்ஞானம் தானே? எம் முன்னேர்கள் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். இன்று நாம் உலகின் பல பாகங்களிலும் காணும் காட்சியென்ன? மனிதனும் ஒரு இயந்திரமாகப் பழககப்பட்டுவிட்டான். பண்டைக்காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் இடையே பல வித்தியாசங்கள். விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது. மனிதனும் மாறிவிட்டான்!

## மாணவர் கடமை

— அ. வேதநாயகி —

மாணவர்கள் தங்களதுஅன்ருட அலுவல்களை ஒழுங்கு முறையின்படி செய்து வருதல் வேண்டும். எம் பழக்கவழக்கங்களைக் கொண்டே மற்றவர்கள் எம்மை மதிக்கிருர்கள் என்பதை என்றும் நினைவில் கொள்ளவேண்டும். படிப்பில் மட்டும் முன்னணியில் நின்ருல் போதாது. வீட்டு வேலைகள் விளையாட்டுகள் பொது நலப் பணி ஆகியவற்றிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். வீட்டில் பெரியவர்கள் சொல்லும் வேலைகளை சுறுசுறுப்புடனும் முகமலர்ச்சியுடனும் ஏற்று ஒழுங்காகச் செய்யவேண்டும். அதே சமயம் வீட்டுப்பணிகள் எம் படிப்பைப்பாதிக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டிலோ வெளி இடங்களிலோ எமது விடுமுறை நாட்களில் விவாசாயம், கைத்தொழில்கள் ஆகியவற்றையும் பழகிக்கொள்ளவேண்டும்.

எதிர்காலத்தில் படிப்பு முடிந்து சமூக வாழ்வில் அடி எடுத்து வைக்கும்போது அதில் பழக்கமில்லை, இவைகள் எனக்கு அவ்வளவாகத் தெரியாது என்றெல்லாம் சொல்லிக்கொண்டு காலத்தை வீணுக்காமல், எப்பணியையும் ஏற்றுச் செவ்வனே செய்வேன் என்று தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் கூறும் உறுதி மிக்கவர்களாக இருககவேண்டும். ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி, தனித்து விடப்பட்டாலும் மாற்ருர்க்கு அடிமைப்படாமல் சுதந்திரமாகத் தன்னல் வாழமுடியும் என்ற திடத்துடன் இருகக வேண்டும்.

தாழ்வு மனப்பான்மை சிறிதளவும் எம்மிடம் இருக்கக் கூடாது. சில குறைகள் எம்மிடம் இருககக்கூடும். அதற்காக நாம் வருந்தக்கூடாது. அவற்றைத் தீர்க்க எம்மால் இயன்றவரை பாடுபடவேண்டும். ஒருவர் ஏதாவது ஒரு விதத்தில் தாழ்ந்தவராக இருக்கலாம். அதே காலம் வேருரு விதத்தில் அவர் உயர்வாக இருக்கலாம். இதே போல் ஒவ்வொருவரும் சிலவற்றில் உயர்ந்தும் சிலவற்றில் தாழ்ந்தும் இருப்பார்கள். எல்லா வகையாலும் உயர்ந்தவர் என்று கூறும்படியாகவும் யாருமில்லை. நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் உயர்ந்திருக்கிருேம். அதனல் நாம் யாருக்கும் தாழ்ந்தவர் அல்ல. இதேபோல் வேருருவகையில் தாழ்ந்திருக்கிருேம். அதனுல் நாம் யாருக்கும் உயர்ந்தவர்களுமல்ல. எல்லாரும் சமமானவர்களே என்பதை நாம் மறக்கக்கூடாது.

## குறள் காட்டும் நெறி

—ஈழத்துச் சிவானந்தன்—

முயலின் மூக்கிலே புல்லுக் குற்றினுற்போன்று எதற்கும் எரிச்சல்படும் ஒருவர் இருந்தார். தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரை பறுவம், வைகாசி விசாகம், ஆனிஉத்தரம்,ஆடிஅமாவாசை, ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி கார்த்திகைத் திங்கள், மார்கழி திருவெம்பாவை போன்ற புனித தினங்களை அவர் விடுவதில்லை. பட்டினி கிடந்து வருத்தப்பட்டு விரதமிருப்பார். அவரைப்பற்றி யாராவது சிறு குற்றம் கூறிவிட்டால் கொடுக்கைக் கட்டிக்கொண்டு சண்டைக்கு நின்றுவிடுவார். சண்டைக்குப் போகும் நாள் விரத நாளா? வெள்ளிக்கிழமையா? என்று அவர் பார்ப்பதில்லை. கையில் கிடைப்பதால் எ[illegible]ராளியின் மண்டையைப் பதம் பார்த்துவிடுவார். குறைகண்டு பொறுக்கமாட்டார்.

அவரது வீட்டிற்கு அயலிலே எந்தவிதமான விரதங்களுமிருக்காது. தானும் தனது முயற்சியுமாகத் திரியும் சாந்தசொருபர் ஒருவர் குடியிருந்தார். அவரை நோக்கிபல வன்பச்சொற்களை கணையுருவில் துந்துதைத்து வருத்தியபோதும் அவர் கலங்கியதில்லை.

எதற்கும் சீறியெழும் அவர் சிறையில் வாடும்பொழுது—சாந்தசொருபர் சந்தோஷமாகத் தன்சம்சாரத்துடன் இருந்தார். நாளடைவில் சாந்தசொருபர் எல்லாராலும் ஏற்றிப் போற்றப்படும் ஏந்தலானர். உண்டியைச் சுருக்கியவர் உபத்திரவப்பட்டார். உள்ளத்தை உறுதிப்படுத்தியவர் உவகை கொண்டார். இருவரிலும் இரண்டாமவரே பெரியவராய் மதிக்கப்பட்டார்.பெரியவராய் மதிக்கப்பட்டவர்—நாளும் பொழுதும் எண்குணத்தான் தாளை வணங்குபவர் எனச் சொல்லத்தான் வேண்டும்.

"உண்ணது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்—
இ[illegible] நோற்பாரின் பின்"

# வானொலி நிகழ்ச்சிகள்

## செவ்வாய் 16-4-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'ரவிகுலமைந்தன்' — இசைச்சித்திரம், 9-45 எஸ். ராமையாபிள்ளை — நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 ராமநாதபுரம் எஸ். பிச்சம்பாள் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 ராமநாதபுரம் எஸ். பிச்சம்மாள் — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 வானவெளிப் பிரயாணம் — பேச்சு, 7-45 திருப்பாம்புரம் என். சிவசுப்பிரமணியபிள்ளை — பாட்டு, 9-15 மெல்லிசை, 9-30 'ஐந்தாவது நாய்' — நாடகம், 9-45 கலைச்சொல் கேளீர்.

## சரவணை சேவாமன்றம்

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணை சேவாமன்றத்தின் நான்காவது வருடாந்தக் கூட்டம் சரவணை கிராம முன்னேற்றச்சங்க 'சிவஞான' மண்டபத்தில் திரு. வி. சேதுகாவலர் தலைமையில் நடைபெற்றது.

மன்றக் காரியதரிசி திரு. வி. பொன்னுத்துரை வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். அடுத்து வரவு - செலவு அங்கீகரிக்கப்பட்டதும் பின் வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. சண்முகரத்தினம், (ஐக்கிய பரிசோதகர்), உபதலைவர்: திரு. கே. திருநாவுக்கரசு, கௌரவ காரியதரிசி: திரு. வி. பொன்னுத்துரை, உபகாரியதரிசி: திரு. வி. எஸ். சம்பந்தன், தனாதிகாரி: திரு. வி. சேதுகாவலர் (நொத்தாரிஸ்).

திரு. எம். இலிங்கப்பிள்ளை, திரு. ரி. கமலநாதன் (கிராம சேவையாளர்), திரு. வி. தியாகராசா, திரு. கே. நடராசா என்போர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சரவணை சின்னமடுச்சேரியில் வசிக்கும் வசதியற்ற பிள்ளைகளுக்குக் கல்வி கற்பதற்கு புத்தகங்கள் வேண்டிக் கொடுக்க வேண்டும் எனவும் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவின் போது "மலர்" வெளியிடுவது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# சரவணை "நாவலர்" விளையாட்டுக்கழகம்

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணை "நாவலர்" விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நேற்று மாலை சரவணை "நாவலர்" விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

சரவணை, நாரந்தனைக் கிராமங்களில் உள்ள சனசமூக நிலையங்களைச் சேர்ந்த இளைஞர்கள் விளையாட்டில் கலந்து கொண்டனர். பல மாணவிகளும் விளையாட்டில் பங்கு எடுத்துக்கொண்டனர். ஆண்களும் பெண்களுமாகப் பலர் விளையாட்டு வைபவத்தைக் கண்டு களிப்பதற்கு வந்திருந்தனர். இலங்கையின் தேசியக்கொடி விளையாட்டு மைதானத்தில் பறக்க விடப்பட்டிருந்தது.

சரவணை சேவாமன்றத் தலைவர் திரு. வி. சேதுகாவலர் கழகக் கொடியை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து செல்வன் மு. மு. மாணிக்கவாசகர் கொடிக்கீதத்தை இனிமையாகப் பாடினர். அடுத்து விளையாட்டுப்போட்டியை ஆசிரியர் திரு. யேம்ஸ் தொடக்கி வைத்தார்.

மாலை நடைபெற்றக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. ஸி. மாணிக்கவாசகர் 'நாவலர்' கழகத்தின் சேவையைப் பாராட்டினர். ஒரு கிராமத்திற்கு ஒரு விளையாட்டு மைதானம் அவசியம் ஆகையால் உங்கள் மைதானத்தின் அபிவிருத்திக் கவனிப்பதாகக் கூடினர்.

வரவேற்புரை நிகழ்த்திய திரு. வி. சேதுகாவலர் பேசுகையில் சரவணைக் கிராமத்தின் முன்னேற்ற வளர்ச்சியை எடுத்துரைத்தார். சரவணைக் கிராமத்திற்குத் தனிப்பட்ட கிராமசபை அமைக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார். வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பரிசில்களும் நற்சாட்சிப் பத்திரங்களும், அளிக்கப்பட்டன.

ஈற்றில் ஆசிரியர் திரு. ஸி. எஸ். சம்பந்தன் கழகத்தின் புதிய தலைவராகவும், சரவணை சன சமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. ந. சற்குணபாலன், நாரந்தனை சரவணை ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. க. சிவகுமார் என்போர் காரியதரிசிகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# "தொழிற்சங்க வளர்ச்சி தடைசெய்யப்படுகிறது"

கம்பஹா, ஞாயிறு

நாட்டிலுள்ள தொழிற்பங்கத்தின் வளர்ச்சியை, திறைசேரி காரியதரிசி எடுக்த நடவடிக்கை தடைசெய்கிறது என்று அகில இலங்கை ஆங்கில உதவி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. எம். ஏ. ஸ்ரான்லி பெரேர, சங்கத்தின் விசேச காரியக் கமிட்டி கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

மேலும் திரு. ஸ்ரான்லி பெரேரா கூறியதாவது:

பொதுசேவை தொழிற்பங்கம், தங்கள் கோரிக்கை எதுவானலும் முதலில் ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். அதன் பின்பு தான் சம்பந்தப்பட்ட மந்திரியுடன் கொள்ளவேண்டும்.

திறைசேரி காரியதரிசியின் தீர்மானத்தை மீண்டும் ஆலோசிக்கும்படியும் அவர் பிறப்பித்த கட்டளையை கூடிய சீக்கிரம் தள்ளும்படியும் கேட்க தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது.

1956-ம் ஆண்டு அக்டோபர் முதலாம் திகதிக்குப் பின் தெரிவு செய்யப்பட்ட தராதரப் பத்திரமற்ற ஆங்கில உதவி ஆசிரியர்கள் மாதம் 64 ரூபா வீதம் சம்பளம் நிர்ணயிககப்பட்டிருந்தபோதிலும், அவர்களில் அநேகர் ஆங்கில சிங்கள சிரேஷ்ட தராதரப்பத்திரம் வைத்துள்ளார்கள்."

1956-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி முதல் இந்தவகையான ஆசிரியர்களுக்கு நிலுவைப்பணத்துடன் சம்பள உயர்வு விகிதமொன்மை ஏற்படுத்தும்படி நிதிமந்திரியை தொழிற் சங்கம் கேட்டுக்கொள்ளவிருக்கிறது.

# மந்திரிக்கு மகஜர்

திருக்கோணமலை, திங்கள்

"உப்புவெளி தமிழ் கலவன் பாடசாலையில் கல்விபயிலும் மாணவ மாணவிகள் பெரும்பாலோர் சைவசமயத்தவர்களே. ஆனல் இப் பாடசாலையில் போதிய சைவ ஆசிரியர்கள் கிடையாது. பல சைவ சமய ஆசிரியர்களை இப் பாடசாலைக்கு நியமிப்பதுடன் இப பாடசாலைக்கு சைவசமயத்லை சார்ந்த தலைமை ஆசிரியர் ஒருவரையும் நியமிக்கவும்."

உப்புவெளிக் கிராம மக்கள் மேற்கண்டவாறு கூறும் மகஜர் ஒன்றை கல்விப்பகுதிக்கு அனுப்பியுள்ளனர்.





விலை மலிவானுலும் ஸல் வெறும் சாதாரண மோல்டட் பால அல்ல. ஆமாம்! ஸல் பிரத்தியேகமான போஷாக்குச் சத்தும் பாலாடையின் சுவையும் கொண்டது—அது மிகவும் இனிப்பானது, மற்றும் ஒரு நொடியில் கரைந்துவிடுகிறது. உங்கள் டீயுடனே, கோப்பியுடனே பாலுக்குப் பதில் ஸல்லை சேர்த்துக்கொண்டு பருகுங்கள். அதன் பாலாடையின் நற்சுவையுடன் கூடிய இனிப்புக்கு மேல் தனியாகச் சீனி சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றே சொல்லலாம்! ஸல்லை வெறும் நீரில் கரைத்தால் பால் பானமாகிறது—அப்பொழுது அதன் நற்சுவையின் பூரண தன்மையை நன்ருக உணர்வீர்கள்! ஸல்லினுடைய தெவிட்டாத சுவையை நீங்கள் பெரிதும விரும்புவீர்கள் என்பது திண்ணம்.

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

குடும்பத்தார் உடன் விரும்புவது

JWT-HLS 2968

# கல்விக்கு பங்கமில்லாமல் ஆசிரியர் இடமாற்றம்

## ஆசிரிய சங்கத்துக்கு யோசனை

யாழ்ப்பாணம், செவ்வாய் 'கல்விப் பகுதியினர் ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்தலில் அவசரப்படாமலும், இடைக்கால மாற்றங்களை மேற்கொண்டு, குழந்தைகளின் கல்விக்கு பங்கம் விளைவிக்காமலும், ஒரு பகுதி ஆசிரியர்க்கு வசதியீனங்களை உண்டாக்காமலும் நடந்துகொள்ளவேண்டும்' என்று வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்திற்கு திரு. ச. கார்த்திகேசு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் இடமாற்றம் விஷயமாக பரிசீலனை செய்யும்படி அவர் ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது:-

கல்வியைச் சீர்ப்படுத்தவே அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கிறது என அப்போது பேசப்பட்டுவந்தது. ஆனால் பொறுப்பேற்ற தருணத்திலிருந்தே ஆசிரியர்களை இடம் சீர்ப்படுத்தும் வேலையே மேற்கொள்ளப்பட்டுவருதலை அவதானிக்கிறோம். இரு வருடங்களுக்கு மேலாகியும் திட்டமான ஒரு கல்விக் கொள்கையில்லாமல் ஆசிரியர் பலரும் மாணவர் பலரும் அல்லலுறும் நிலையில் இருத்தலைக் காண்கின்றோம்.

அரசினர் பாடசாலை ஆசிரியர் பலர் இத்தருணத்தைப் பயன்படுத்தி, தமது பதவி, நியமனம். சேவை என்பவற்றை இன்னமும் உறுதிப்படுத்திக்கொள்ளாத சுவீகரிக்கப்பெற்ற பாடசாலை ஆசிரியர்களுடன் சமத்துவம் பேசிக் கல்விப் பகுதி அதிகாரிகளையும் தம் வழிக்கிழுத்து அவ்வாசிரியர்களின் நல உரிமைகளை மூடி மறைத்து அவர்களை அநாதைகளாக்க மிக முயன்று வருகிறார்கள். அவர்களின் கருத்து வெளிப்பாடுகளை நோக்கும்போது கல்விப் பகுதியையே கட்டியாளும் மனப்பான்மை தொனிக்கின்றது.

இவற்றிலிருந்து அரசாங்கம் சுவீகரித்த பாடசாலை ஆசிரியர் மூன்று பகுதியினரால் நெருக்கப்படுதலைக் காண்கின்றோம். வெளிமாகாணங்களில் உள்ள சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர் ஒரு புறம், அரசினர் பாடசாலை ஆசிரியர்கள் ஒரு புறம், கல்வி அதிகாரிகள் மற்றொரு புறம்.

எனவே ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் முதலிற் தம் எண்ணங்களைச் சீராகக வேண்டும். எண்ணம் சீரானால் ஏமாற்றம் பாகுபாடு பிரிவினை பிளவு என்பன இல்லாத உழைப்பும் உண்மையும் நிறைந்த ஓர் ஐக்கிய சமூகம் உருவாகும். அதனால் நாட்டிலே பொது நலன்கள் சிறப்படையும்.

## மணிக்கோபுர குடமுழுக்கு விழா

யாழ்ப்பாணம், செவ்வாய் நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் 4 மணிக்கோபுரக் குடமுழுக்கு விழா நேற்றுக் காலை நடைபெற்றது, மணிக்கோபுரத்தில் சமீபத்தில்தான் இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட மணி ஆரோகணம் செய்துவைக்கப்பட்டது. குடமுழுக்கு விழாவை சிவஸ்ரீ இராஜேந்திரக் குருக்கள் நடத்திவைத்தார். ஏராளமான பக்தர்கள் இவ்வைபவத்தைக் கண்டுகளித்தனர்.


## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பினாலா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது

காணத்தயாராகுங்கள்



★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி.எஸ். துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி டி. ராஜகாந்தம்
★ கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ்

# குமார ராஜா

திரைக்கதை—வசனம் முரசொலிமாறன் எம். ஏ.
இசை டி. ஆர். பாப்பா
டைரக்ஷன் ஜி. கே. ராமு

நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்

பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

மனோகரா (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — சாவித்திரி
நடித்த
வணங்காமுடி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ந் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ்ப்பாண நகரம் . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை முதல்வருக்கு இச்சந்தர்ப்பத்தில் சிறு வேண்டுகோள்விடுக்க விரும்புகிறேன். மாநகரசபையில் இதுவரை காலமும் பதவி வகித்தவர்கள், மாநகரசபை எல்லா இன, மத, அரசியல்கொள்கையுடைய எல்லோருக்கும் பொதுவான வரியிறுப்பாளர்களுக்குச் சேவை செய்ய வேண்டிய ஒரு பொதுவான இடம் என்பதை மறந்து, தங்களுடைய கட்சிகளையும், கட்சித் திட்டங்களையும் சாதிக்கும் ஒரு இடமாகமாநகரசபையை—மாநகரசபைவரியிறுப்பாளர்களுடைய பணங்களைச் செலவிட்டு வந்திருக்கிறார்கள். இவர்களுடைய சேவையில் மாநகரசபை வரியிறுப்பாளர்களின் பணத்தில் ஒரு சதம்கூட அவர்களுக்கு திருப்பி நன்மையாகக் கிடைக்கவில்லை. கட்சிக்காக மேயர்மார்களை ஏற்றுகிற இறக்குகிற சேவைகளைத்தான் செய்கிறார்கள்.

கட்சி என்ற அடிப்படையில் மாநகரசபை நிர்வாகம் நடைபெற இடங்கொடுக்காது, பல கட்சிகளையும், சமயசமூகங்களையும் கொண்ட எல்லா வரியிறுப்பாளருக்கும் வரியிறுப்பாளர்களின் பிரதிநிதி என்ற முறையில் உங்கள் சேவையை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைத்து விசேஷ கமிஷனிடம் கொடுத்து விட வேண்டும் என்று நான்மந்திரியிடம் கூறியதாகவும், இதற்காக முயற்சித்ததாகவும் பொது மக்களிடையில் என்னைப் பற்றிச் சிலர் அறிக்கைகளும், பிரசாரங்களும் செய்கிறார்கள். இது உண்மையல்ல. உண்மை என்னவென்றால் மாநகரசபை நிர்வாகத்தை அரசாங்கம் பொறுப்பெடுத்து நடத்தக்கூடிய அளவுக்கு மாநகரசபையைக் கலைக்க வேண்டுமென்று பொது மக்களும் அரசாங்கமும் நினைத்துச் செயல் புரிய வேண்டிய அளவுக்கு யாழ்ப்பாண மாநகரசபை சீர்கேடான முறையில் நடாத்தப்பட்டதுதான் முக்கிய காரணமாகும்.

சீர்கேடாக மாநகரசபை நிர்வாகம் நடைபெறுகிறது என்று அரசாங்கமும், பொது மக்களும் கருதும் அளவுக்கு மாநகரசபை நிர்வாகம் நடைபெற்றதின் நிமித்தம் யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைத்தால் என்ன என்று இங்கு வந்து விசாரணை செய்த உயர்தர அரசாங்க அதிகாரி சிபார்சு செய்ததை நான் அறிந்து எவ்வளவோ கஷ்டப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைக்க வேண்டாம் என்று நேரிலும், எழுத்து மூலமும் வாதாடினேன். இதன் நிமித்தமாகத்தான் யாழ்ப்பாண மாநகரசபையை கலைக்கப்படாது பாதுகாக்கப்பட்டது என்றதை நான் இங்கு பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைப்பதென்பது பெரிய கஷ்டமானதல்ல. நான் மாநகரசபை கலைக்கப்படாதிருக்க எவ்வளவு பாடுபட்டேன் என்பதை அரசாங்கத்திடம் விசாரித்தால் ஆதாரபூர்வமான பல தகவல்களை அறியலாம். இதனை நான் கூறவிரும்பவில்லை.

அரசாங்கம் எண்ணியது போல யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட்டால் ஐந்து அல்லது பத்து வருடங்களாவது மாநகரசபைத் தேர்தலை நடைபெறாது. அரசாங்கத்தின் பொறுப்பில் சபை இயங்க வேண்டி ஏற்பட்டிருக்கும். இதனால் ஒரு உண்மையான உறுப்பினரினால் மாநகரசபை வரியிறுப்பாளர்கள் பெறும் நன்மையிலும் பார்க்க மிகக் குறைந்த அளவான நன்மைகளையே பொதுமக்கள் பெற முடியும் என்று கருதியதினாலேயே மாநகரசபை கலைக்கக்கூடாது என்று முழு மூச்சாக வேலை செய்தேன் என்பதையும், நான் இப்படிச் செய்யும் விஷயங்களை எல்லாம் மற்றவர்களைப்போலப் பிரசாரம் செய்யாது என்னுடைய கடமையாகவே செய்கிறேன்.

திரு. ஜோன் நன்றிதெரிவித்துப் பேசுகையில்:-

யாழ்ப்பாண நகரின் சகல வட்டாரங்களிலும் மின்சாரம் கிடைக்கச் செய்வதோடு நகரின் அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

மேயர் திரு. பி. எம். ஜோனுக்குஅவரதுவட்டார மக்களால் குருநகர் சனசமூகநிலையத்திற்கு முன்னால் பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. மேயர் குருநகரின் பல வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

திரு. ஜோன் தொடர்ந்து பேசுகையில்,குருநகர் மக்களின் முன்னேற்றத்திற்காக அருகிலுள்ள சிறு தீவில் குடியேற்றத் திட்டமொன்றினை ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதாகவும், அத்தீவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே பாலம் அமைப்பது பற்றிய பொதுசன அபிப்பிராயத்தை அறிய ஆவலாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வண. சுவாமி சர்வே ஓ. எம். ஐ. இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். உதவி மேயர் திரு. துலரராஜசிங்கம், திரு. ஏ. ஜீ. ராஜசூரியர், திரு என்.தேவபாலசுந்தரம், குவாஸி. சுல்தான் ஆகியோரும் பேசினர்.

## 150-வது பிறந்த தினம்

புதுடில்லி, ஏப். 15 கவிஞரும்,சாகித்தியகர்த்தாவுமான ஸ்ரீ சுவாதித் திருநாளின் 150-வது பிறந்த தினம் நாளை நாடெங்கும் கொண்டாடப்படும். திருவாங்கூர்மன்னராய்இருந்த அவர்தம் 34-ம் வயதில் காமானார்.

## பிரசார திரைப்படங்கள்

புதுடில்லி, ஏப். 15 இந்தியாவை ஆக்கிரமிப்பு நாடாகக் காட்டும் சீனத் திரைப் படமொன்று இலங்கையிலும், நேபாளத்திலும் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் காட்டப்பட்டது என அறிவிக்கப்பட்டது.கொழும்புயோசனை பற்றி இப்படத்தில் எதுவும் இல்லை.

அதே சமயம் "மா நிவரும் எல்லைக்கோடு" என்ற பெயரில் இந்தியத் திரைப்படம் ஒன்று 13 இந்திய மொழிகளிலும், ஆங்கிலம்,பிரெஞ்சு, அரபு ஆகிய மொழிகளிலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவை பல நாடுகளில் காட்டப்பட்டுவருகின்றன.

## கிராமத்துக்கொரு தமிழ்ச் சங்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய் தீவுப்பகுதியில் தமிழ்ச் சங்கங்கள் தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தமிழ்ச் சங்கங்களை ஆரம்பிக்கும் விஷயத்தில் தீவுப்பகுதி எம். பி. திரு. வி.ஏ. கந்தையா அதிக சிரத்தை எடுத்துவருகிறார். அவர் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று தமிழ்ச் சங்கம் நிறுவப்படவேண்டிய தன் அவசியம்பற்றிப் பிரசாரம் செய்துவருவதாகத் தெரிகிறது.

# தமிழ் இயக்கம் . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தம்பலகாமம் உபதபாற்கந்தோரில் எல்லாம் தமிழ் இயக்கத்தைத் தமிழரசுக்கட்சி திருமலைக்கிளைத் தலைவர் திரு. சேமசுந்தரம் இன்று ஆரம்பித்துவைத்தார்.

கிண்ணியாவிலும் எல்லாம் தமிழ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மூதூர் முதலாவது பிரதிநிதி ஜனுப் எம். எச். முகமதலி அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

யாழ் அரசினர் வைத்தியசாலை பணியாளர்களும்,யாழ் செளக்கிய சேவைப் பகுதி சிக்கன சேமிப்புச் சங்க அங்கத்தவர்களுமான திரு. எஸ். ஆர். சின்னத்துரை, எஸ். ஆர். அருமைநாயகம்ஆகியோரின் தாயாரும், திரு. என். பொன்னுத்துரையின் மாமியாருமான தங்கம் காலமானார். ஈமக்கிரிகைகள் 12 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

காரியதரிசி
யா. செள. சே. சி.சே. சங்கம்.

## சன சமூக நிலைய நிர்வாகிகள்

கொக்குவில், திங்கள் கொக்குவில் சன சமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் திரு சி பொ. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை, உப தலைவர்கள்: செல்வன் அ. அரியரெத்தினம், செல்வன் ம. இராசரத்தினம்; காரியதரிசி: செல்வன் க. சிவலிங்கம், உப காரியதரிசி: செல்வன் ந. கணேசு, தனாதிகாரி: செல்வன் செ. செல்வரத்தினம், உப தனாதிகாரி: செல்வன் மு. சி. ஸ்ரீராகுலன், நூல்நிலையமேற்பார்வையாளர்: செல்வன் த. சிவசுப்பிரமணியம், உப நூல் நிலைய மேற்பார்வையாளர்: திரு. க. தேவராசா. விளையாட்டுத் தலைவர்: தியு. தா. ஜெயசிங்கா. கணக்குப் பரிசோதகர்: செல்வன் அ. சிறிகாந்தன்.

நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## பாக்.விமானங்கள் அத்துமீறின

புதுடில்லி, ஏப். 15 இந்த ஆண்டு பாகிஸ்தான் விமானங்கள் 6 தடவை இந்தியப் பிரதேசம் மீது அத்துமீறிப் பறந்திருக்கின்றனவென்றும், சீன விமானங்கள் ஒரு தடவையும் அத்துமீறவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

## சைவ வளர்ச்சி சங்கம்

புத்தளம், திங்கள் சரித்திரத் தொடர்புடையதாகிய பழமை மிகுந்த சேனைக்குடியிருப்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தோடு ஒரு மண்டபம் அமைக்கும் நோக்கத்துடன் புத்தளம், சேனைக்குடியிருப்பு சைவ வளர்ச்சிச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் கோயில்கள் அமைக்க வேண்டிய அவசியத்தை ஆசிரியர் திரு. வ. தாளையா தமது ஆரம்பஉரையில்,பலரும் விளங்க எடுத்தியம்பினர்.

தலைவர்: திரு. பி. பீ. நவரத்தினம், உப-தலைவர்: திரு. க. நாகலிங்கம், செயலாளர்: திரு. வ. தாளையா, துணைக் காரியதரிசி: திரு. மதுரமுத்து, பொருளாளர்: திரு. க. கயிலைநாதன்.